சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 3	இதழ்: 5	அக்டோபர் - 2021	விலை - ரூ.10/-
VOL:3	ISSUE: 5	OCTOBER- 2021	Rs. 10/-



தெய்வீக அன்னை
மாயம்மா

MAS மஞ்சு அசோசியேட்ஸ்

G/A- 232, உணவு தானிய மார்க்கெட், கோயம்பேடு, சென்னை 107.
போன்: 044 24793822 / 23, 9382163822.
E-mail : kamaraj2306@gmail.com

* எங்களின் சேவைகள்

வங்கி கடன்கள்

- வீட்டுக்கடன்
- அடமானக்கடன்
- வியாபாரக்கடன்



இன்சூரன்ஸ்

- LIC & STAR

வருமான வரி தாக்கல்

- டேக்ஸ் ஆடிட்
- NON டேக்ஸ் ஆடிட்



சிறந்த முறையில் செய்து தருகின்றோம்.

மக்கள் சேவையில் 18 வது ஆண்டு..

வாடிக்கையாளர்களுக்கு நன்றி!

எங்கள் நிறுவனத்திற்கு வாடிக்கையாளர்களை அறிமுகப்படுத்தி வாழ்நாள் முழுவதும் வருமானம் பெறலாம். விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-3 மலர்-5 அக்டோபர் - 2021

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
செல்வி. S.சௌம்யா, சென்னை.

இதழ் வடிவமைப்பு
சிகரம் பப்ளிகேஷன்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி. அயனாவரம், சென்னை 600 023.
செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



என் அன்பு குழந்தாய்!

என் அன்பு குழந்தாய்! விஞ் ஞான வளர்ச்சியால் பல நன்மைகள் உருவானாலும், தீமைகளும் இல்லாமல் இல்லை. அதில் முக்கியமானது உன் சரீரம் உன்னை அறியாமல் இயந்திரங்களின் கட்டுப்பாட்டிற்குள் சென்று கொண்டிருக்கின்றது.

நாம் அன்றாடம் செய்யும் சாதார ணமான வேலைகளுக்குக்கூட சரீர மானது இயந்திரங்களை எதிர்பார்க்கும் நிலை இருக்கிறது. இதுவே சோம் பேறித்தனத்தை அதிகரித்து நோய்கள் உடலை தாக்குவதற்கு காரணமாகின்றன. சரீரம் நமக்கு வேலைக்காரனாக இருக்க வேண்டுமே ஒழிய, அதை நமக்கு எஜமானாக ஆக்கிவிடக் கூடாது

சரீரம் ஆரோக்கியமாக இருக்க நாம் உண்ணும் உணவு சாத்வீகமாக இருக்க வேண்டும். அதுவே நமது ரத்தமாக மாறி குணத்தை நிர்ணயிக்கின்றன. உணவில் ஏற்றத்தாழ்வு ஏற்படும் போது நமது உடல் தனது கட்டுப்பாட்டை இழக்கின்றது. ஆரோக்கியமான உணவே, உடலையும், மனதையும் ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

- சீரடி சாய்பாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

சற்குரு சாயிநாதரின் அருளால் முப்பத்து ஒன்பதாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 12.09.2021 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்ம ஞான சபையில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) நடைபெற்றது.

"பாராயணப் பகலவன்" திரு.சுந்தர் சாய்ராம் அவர்கள் இம்மாத இதழை வெளியிட சாயி பக்தரும், சாயி சேவகருமான அன்பு நண்பர் ஐ.சி.எப் திரு.கருணாநிதி அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்கள்.

பெரும் தொற்றின் காரணமாக அரசாணையின்படி பக்தர்களை கூட்டமாக அனுப்பாமல் ஒவ்வொருவராக அனுப்பி விழாவை சிறப்பித்த பகவான் சா யிநாதரின் பாதங்களை பணிகின்றோம்.

குடந்தை அருகே இருக்கும் வலங்கைமான் என்ற ஊரின் வர்த்தக சங்கத் தலைவர் திரு. பரதாழ்வார் அவர்கள் தன் நண்பர்களுடன் வேறு வேலை நிமித்தம் சென்னை வந்தவர் பகவான் சாயிநாதரின் வழிகாட்டுதலின்படி நமது இதழைப்பற்றியும், நமது சாயி சேவைகளைப்பற்றியும் அறிந்து "சாய் தியானாவிற்கு" வந்திருந்து பாபாவின் ஆசி பெற்றுச் சென்றார்கள்.

நமது அன்புச்சகோதரியும், பாபாவின் பக்தையுமான, திருமதி.சூர்யா அவர்கள்





தன்னுடைய சிநேகிதி. லதாவின் திருமணத்திற்காக, சாய் தியானாவில் பிரார்த்தனை வைத்திருந்தார். அவரின் பிரார்த்தனையை பகவான் பாபா மூன்றே வாரத் தில் நிறைவேற்றித் தந்தற்காக பாபாவிற்கு திருமண அழைப்பிதழை வைத்து நன்றி செலுத்தி னார்கள்.

அன்புச்சகோதரர் வில்லிவாக்கம் திரு. நாராயணன் அவர்கள் தனது புதல்விக்கு சுகப்பிரசவம் நடக்க வேண்டுமாய் பிரார்த்தனை வைத்திருந்தார்கள். பாபாவின் அருளால் சுகப் பிரசவம் நிகழ்ததற்காய் பாபாவிற்கு நன்றி செலுத்தி னார்கள்.

பிரார்த்தனை செம்மல் திரு.கலியன் சாய் அவர்களின் இல்ல திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ள சேலம் செல்ல வாய்ப்பு கொடுத்தமைக்காக பகவான் சாயி நாதருக்கு நன்றி செலுத்துகின்றோம்.

சேலத்தில் தெய்வீக அன்னை மாயம்மாவின் தரிசனமும், பகவான் பாபாவின் தரிசனமும், நாமக்கல் ஆஞ்சநேயர் தரிசனமும் கிட் டியது மறக்கமுடியாத நிகழ் வுகள். உடன் வந்த தோழர்கள் திரு. உதி மூர்த்தி சாய்ராமுக்கும், திரு. கோபால் சாய்ராமுக்கும் எமது நன்றிகள்!





சிவகங்கை சன்மார்க்க சங்க செயலாளரும், நல்லா சிரியர் விருது பெற்றவருமான புலவர் திரு. அ.சுந்தரம் அவர்கள், நமது இதழில் வெளிவரும் கட்டுரைகளின் சிறப்புகளை தொலைபேசி வாயிலாக பகிர்ந்து கொண்டார்கள். அய்யாவைப் போன்ற ஆசிரியர்களின் கருத்துக்கள் எங்களை இன்னும் ஊக்கத்துடன் சாயி சேவையில் ஈடுபட வைக்கின்றன. புலவர் அய் யாவிற்கு எங்களது மனமார்ந்த நன்றிகள்!

அன்புச்சகோதரி திருமதி. லதா பாபு அவர்கள் வீடு கட்ட வேண்டும் என்று பாபாவிடம் கோரிக்கை வைத்து மூன்று மாதத்திற்குள்ளாக வீடு கட்டி **"கிரகப்பிரவேசம்"** பத்திரிக்கை வைத்து பாபாவிடம் நன்றி செலுத்தி னார்கள். பாபாவின் அருளால் விழாவில் கலந்து கொண்டது மனநிறைவைத் தந்தது.

பகவான் சாயிநாதரின் அருளால் மிக விரைவில் உலகெங்கும் பரவியிருக்கும் பெருந் தொற்று கட்டுக்குள் வந்து உலக மாந்தர்கள் அனைவரும் நிம்மதியுடனும், ஆரோக்கியத்துடனும், வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த இரண்டாம் திருமுறை

திருநீற்றுப் பதிகம்

திருநீற்றுப் பதிகம் என்பது பாண்டிய மன்னன் கூன் பாண்டியனின் வெப்ப நோயை நீக்க சிவபெருமானை நினைத்து திருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் ஆகும்.

இதனால் மன்னன் நோய் நீங்கி நலம் பெற்றான். இந்த திருநீற்று பதிகத்தின் பாடல் பொருள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலின் பொருளும் ஒவ்வொரு பத்தியாக கொடுக்கப்பட்டுள்ளதுஞ் வெப்ப மிகுதியால் உண்டாகும் காய்ச்சல், அம்மை நோய்கள் நீங்க பாராயணம் செய்ய வேண்டிய திருப்பதிகம்!!!

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு

சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு

தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு

செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறேஞ் (1)

பொருள்: சிவந்த பவளம் போன்ற வாயினை உடைய உமைபங்கன் ஆகிய திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானது திருநீறு, மந்திரம் போல நினைப்பவரைக் காப்பது. வானவர் தம் மேனிமேல் பூசிக்கொள்ளப்படுவது. அழகு தருவது. எல்லா நூல்களாலும் புகழப்படுவது. ஆகமங்களில் புகழ்ந்து சொல்லப்படுவது. சிவமயத்தில் நிலைத் துள்ளது.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு

போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு

ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு

சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறேஞ் (2)

பொருள்: குளிர்ந்த நீர் நிரம்பிய வயல்கள் சூழ்ந்த திருஆலவாயிலில் விளங்கும் சிவபிரானது திருநீறு, வேதங்களில் புகழ்ந்து ஓதப்பெறுவது. கொடிய துயர்களைப் போக்குவது. சிவஞானத்தைத் தருவது. அறியாமை முதலியவற்றைப் போக்குவது. புகழ்ந்து போற்றத் தக்கது. உண்மையாக நிலைபெற்றிருப்பது.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு

சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு

பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு

சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறேஞ் (3)

பொருள்: திருஆலவாயான் திருநீறு வீடுபேறு அளிப்பது. முனிவர்களால் அணியப் பெறுவது. நிலையாக எப் போதும் உள்ளது. தக்கோர்களால் புகழப்படுவது. இறைவனிடம் பக்தியை விளைப் பது. வாழ்த்த இனியது. எண்வகைச் சித்தி களையும் தரவல்லது.

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு

பேணி அணிபவர்க் கெல்லாம்

பெருமை கொடுப்பது நீறு

மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு

சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறேஞ் (4)

பொருள்: திருஆலவாயான் திருநீறு கண்களுக்கு இனிமை தருவது. அழகைக் கொடுப்பது. விரும்பி அணிவார்க்குப் பெருமை கொடுப்பது. இறப்பைத் தடுப்பது. அறிவைத் தருவது. உயர்வு அளிப்பது.

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு

பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்

ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு

தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறேஞ் (5)

பொருள்: திருஆலவாயான் திருநீறு, பூசுதற்கு இனிமையானது. புண்ணியத்தை வளர்ப்பது. பேசுதற்கு இனியது. பெருந்தவம் செய்யும் முனிவர்கட்கு ஆசையை அறுப்பது. முடிவான பேரின்பநிலையை அளிப்பது. உலகோரால் புகழப்படுவது.

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு

வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு

பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு

திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறேஞ் (6)

பொருள்: அழகிய மாளிகைகள் சூழ்ந்த திருஆலவாயான் திருநீறு செல்வமாக இருப்பது. துன்பம் போக்குவது. மனவருத்தத்தைத் தணிப்பது. துறக்க இன்பத்தை அளிப்பது. எல்லோருக்கும் பொருத்தமாக இருப்பது. புண்ணியரால் பூசப்பெறுவது.

எயிலது அட்டது நீறு இருமைக்கும்



உள்ளது நீறு

பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு

துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு

அயிலைப் பொலிதரு சூலத் தால

வாயான் திருநீறேஞ் (7)

பொருள்: கூர்மைக்கு விளக்கம் தருகின்ற சூலப்படையினை ஏந்திய திருஆலவாயான் திருநீறு, திரிபுரங்களை எரிக்கச் செய்தது. இம்மை மறுமை இன்பம் தர இருப்பது. பிறரோடு பழகும் பயன் அளிப்பது. செல்வமாக விளங்குவது. உறக்கநிலையைத் தடுப்பது. தூய்மையை அளிப்பது.

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு

பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு

தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு

அராவணங் குந்திரு மேனி ஆல வாயான் திருநீறேஞ் (8)

பொருள்: பாம்புகள் வளைந்து தவழும் திருமேனியனாகிய திருஆலவாயான் திருநீறு., இராவணன் பூசிப் பயன் பெற்றது. நல்லவர்களால் எண்ணத்தக்கது. பராசக்தி வடிவமானது. பாவம் போக்குவது. தத்துவங்களாக இருப்பது. மெய்ப் பொருளை உணர்த்துவது.

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு

மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு

ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு

ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறேஞ் (9)

பொருள்: நஞ்சுண்ட கண்டனாகிய திருஆலவாயான் திருநீறு, திருமால் பிரமர்களால் அறியப்பெறாத தன்மையை உடையது. வானுலகில் வாழும் தேவர்கள் தங்கள் மேனிகளில் பூசிக்கொள்வது. பிறவியாகிய இடரைத் தவிர்த்து நிலையான இன்பம் அளிப்பது.

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூட

கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு

எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு

அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறேஞ் (10)

பொருள்: மேல் உலகில் வாழ்வோர் பணிந்து போற்றும் திருஆலவாயான் திருநீறு, குண்டிகை (கமண்டலத்தை) ஏந்திய கையர்களாகிய சமணர்கள் சாக்கியர்களின் கண்களைத் திகைக்கச் செய்வது. தியானிக்க இனியது. எட்டுத் திசைகளிலும் வாழும் மெய்ப்பொருளை அடைந்தவரும் ஏத்தப்பெறும் தகைமைப் பாடு உடையது.

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்

போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்

தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்

சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமேஞ் (11)

ஆற்றலும், பிறரைக் கொல்லும் வலிமையும் உடைய விடையின்மீது ஏறிவரும் ஆலவாயான் திருநீற்றைப் போற்றிப் புகலியில் விளங்கும் பூசுரனாகிய ஞானசம்பந்தன் சைவத்தின் பெருமையைத் தெளிவித்துப் பாண்டியன் உடலில் பற்றிய தீமை விளைத்த பிணி தீருமாறு சாற்றிய இப்பதிகப்பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர் நல்லவராவார்.

தென்னாடுடைய சிவனே போற்றி!

என்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

கயிலைமலையானே போற்றி!

போற்றி!!!

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை

99418 16692, 88258 31068

தொடர் –39

குருவைத் தேடி

பெரும் படையுடன் புறப்பட்ட மகன் விஸ்வநாத நாயக்கனுக்கும், தந்தை நாகம்ம நாயக்கனுக்கும், இன்றைய அம்மையநாயக்கனூரான அன்றைய சந்தையூரில் போர் தொடங்கிற்று...

பத்து நாட்கள் நடந்த போரில் தந்தை நாகம்ம நாயக்கன் வீழ்ந்தான். மகன் தனது வெற்றியை சமர்ப்பிக்க கிருஷ்ணதேவராயரை நோக்கிப் ஆந்திர தேசத்திற்குப் புறப்பட்டான்.

ஒருவாறாக போர் பதட்டம் நீங்கி ஊர் பழைய நிலையை அடைய ஒரு மாத காலம் ஆயிற்று. பாண்டிய நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மகன் விஸ்வநாத நாயக்கரை மன்னனாக நியமித்தார் கிருஷ்ண தேவராயர். எனவே படைக்கு உதவி செய்ய வந்த பல்லக்கு தூக்கிகள், கொல்லர்கள், யானை, குதிரையை பராமரிப்பவர்கள் என நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் சந்தையூரிலேயே தங்கிவிட்டனர்.



ஆரம்பத்தில் எல்லாம் நன்றாகவே சென்று கொண்டிருந்தன. காலம் போகப் போக மதுரையில் கிருஷ்ண தேவராயர் ஆட்சி ஏற்பட்டவுடன், எல்லாம் தலைகீழாக மாற ஆரம்பித் துவிட்டன. ஆண்டாண்டு காலமாய் இங்கே வசித்து வந்த பூர்வ குடிமக களை ஒதுக்கி தங்கள் இன மக்களை முதன்மையான இடங்களில் அமர்த்தினர்.

அவ்வாறாக முருகையாவின் தவக்குடிலுக்கும் ஆபத்து வந்தது. அவரின் தவக்குடிலுக்கு எதிரில் தங்களின் தெய்வத்தை நிர்மானித்து, ஆயிரக்கணக்கான ஆடு மாடுகளை பலி கொடுத்து, ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என ஆதிகாலத்து பழக்க வழக்கத்தின்படி அதகளம் செய்தனர்.

ஊருக்குள் ஒரே ஆலயமான கி.பி.12 ஆம் நூற்றாண்டிற்கு முன்பே இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் காலத்தில் கட்டப்பட்ட சிவாலயத்தை அவர் களை வழி நடத்தியவர்களின் சொற்படி பெருமாள் கோவிலாக மாற்றியமைத்தார்கள்.

அவர்களின் முரட்டுத்தனமான பக்தி வழிபாடு முருகையாவின் தவத்திற்கு பெரும் இடையூறாக இருந்தது. அதுமட்டுமின்றி, மக்களின் மூட நம்பிக்கைகளை மாற்றி அவர்களை தவ வாழ்வின்படி மாற்றிக் கொண்டிருந்த அவரின் செயல்பாடுகள் அதன்பின் தடைபெற்றது.

புதிய பழக்கவழக்கங்கள் மனிதர்

களுக்கு உள்ளக் கிளர்ச்சியை தூண்டி விட்டபடியால் மனிதர்கள் புதிதாக வந்தவர்களுடன் இணைந்து கொண்டு அவர்களின் கலாச்சாரத்தை பின்பற்றி வாழத்துவங்கினர்.

புதிய மக்கள், முருகையாவின் தவத்திற்கு பலவாறாக ஊறு விளை வித்தனர். அவரை அந்த இடத்தை விட்டு விரட்டுவதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அதை எல்லாம் செய்தார்கள். அவரை பாம்பாட்டி, மந்திரவாதி, என்று வசைபாடினார்கள்.

இவையெல்லாம் முருகையாவை எதுவும் செய்ய இயலவில்லை. அவர் முழுமையாக தவத்தில் ஈடுபட்டிருந்தார். நேரம் பார்த்திருந்த சதிகாரக் கூட்டம் அவர் தவத்தில் இருக்கும் போது அவரின் தவக்குடிலுக்கு நெருப்பு வைத்து தப்பியோடியது.

தன்னைச் சுற்றி என்ன நடக்கின்றது என்று கூட அறியாது ஆழ்ந்த தவத்தில் இருந்த முருகையாவின் முன் வந்து நின்றது அவரின் துணையான நாக ராஜா. முருகையாவின் தவ ஆற்றலின் சக்தியை ஊர் அறியும் படி செய்ய முடிவு செய்தார் நாக ராஜா. அதன்படி தீப்பிடித்த தவக்குடி லில் இருந்து தீ அருகில் இருந்த வீடுகளுக்குப் பரவியது.

சற்று நேரத்தில் ஊரே தீப்பி டித்து எரியத் தொடங்கியது. மக்கள் அனைவரும் தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஊரை விட்டு ஓடத்துவங்கினர். ஊரில் உள்ள இளைஞர்கள் என்ன முயற்சித்தும் தீயை அணைக்க முடியவில்லை. ஊரே எரிந்து சாம்பலானது.

மறுநாள் காலையில் ஊர்மக்கள் ஒவ்வொருவராக எரிந்து போன தங்க ளது வீடுகளைப் பார்க்க வந்தனர். அப் போதுதான் அந்த அதிசய காட்சியைக் கண்டனர். ஊரே எரிந்து சாம்பலாகக் கிடக்க, முருகையாவின் தவக்குடில் மட்டும் எரியாமல் அப்படியே இருந்தது. அனைவரும் உள்ளே சென்று பார்க்க அப்போதும் முருகையா தவத்தில் இருந்தார். அவரின் முன்னால் நாகராஜா படம் எடுத்தபடி நின்று கொண்டிருந்தது.

அப்போதுதான் முருகையாவின் தவ ஆற்றலை உணர்ந்து கொண்டார்கள் மக்கள். தங்களது தவறை உணர்ந்த அவர்கள் அவரிடம் மன்னிப்பு கேட்க காத்திருந்தனர்.

வெகுநேரத்திற்குப் பின் கண் விழித்த முருகையா தன்னை சுற்றி நிற்பவர்களிடம், தாம் இன்னும் சிறிது நேரத்தில் சீவசமாதி ஆகப் போவதாகவும், தன்னை இப்போது அமர்ந்திருக்கும் இடத்திலேயே சமாதி வைக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

மக்கள் தங்களை மன்னிக்கும்படியும், தாங்களின் சீவசமாதி முடிவை கைவிட்டு விட்டு எங்களை நல் வழிப்படுத்துமாறு மன்றாடினர். அனைவருக்கும் புன்சிரிப்பையே பதிலாகத் தந்த முருகைய்யா தான் குறிப்பிட்ட நேரத்தில் மெல்ல கண்களை மூடிக்கொண்டு சமாதி நிலையை அடைந்தார்.

மக்கள் தங்களது அறியாமையால் ஒரு சிறந்த யோகியோடு வாழும் வாழ்க்கையை தவற விட்டு விட் டதை எண்ணி மிகவும் மனம் வருந் தினர். பின்பு முருகையாவின் எண் ணப்படியே அவரின் தவக்குடில் இருந்த இடத்திலேயே அவரை சமாதி வைத்து வணங்கிவந்தனர். அவருடன் இருந்த நாகராஜா தினந்தோறும் அதிகாலையிலேயே அவரின் சமாதியில் வந்து நின்று படமெடுத்து ஆடியபடியே நிற்கும்.

காலம் செல்லச் செல்ல மக்க

ளின் தலைமுறைகள் மாற மாற முருகையாவின் சமாதி வழிபாடு நின்று போயிற்று. அவரது சமாதி இருந்த இடம் கவனிப்பாறின்றி பொட்டல்காடாக மாறியது. அதற்குப்பின் நாகராஜாவும் மக்கள் கண்களில் தென்படுவதும் நின்று போனது.

நாகராஜா இன்றும் முருகையாவின் சமாதிக்குள்ளேயே வாழ்ந்து வருகின்றது. அங்கிருந்து அது வெளியே வரும் வழிதான் சடையம்மாவின் வீடு. கால மாற்றத்தால் அங்கே சடையம்மா வசிக்கவந்தார்கள். நாகராஜா தன்னுடைய நடமாட்டத்திற்கு பாதுகாப்பாய் இருக்க வேண்டி சடையம்மாவையும் ஆட்கொண்டார்கள். இருப்பினும் இக்கதை எதுவும் சடையம்மாவிற்கு தெரியாது.

நாகராஜா முருகையாவின் ஏழா வது பிறவியாகிய உனக்காக அது காத்திருந்தது. உனக்கு குண்டலினி தீட்சை அளித்ததோடு அது நாக லோகம் சென்று விட்டது. இனி யார் கண்ணிலும் அது தென்படாது.

நாகராஜாவினுடைய கதை இதுதான். நாகராஜாவின் அருள் உனக்கு என்றென்றும் கிட்டும். அவர் கொடுத்த தீட்சையை பயன்படுத்தி ஆன்மீகத்தில் முன்னேறு. இந்த சென்மத்து குருவை தேடுவதற்கு அது உனக்கு பயன் உள்ளதாக இருக்கும். என்று கூறியவர், சரி நேரமாகிவிட்டது. நான் புறப்படுகின்றேன். அடுத்து உனது திருமணத்தில் சந்திக்கின்றேன் என்றவாறே என் பதிலுக்குக் கூட காத்திராமல் காற்றோடு காற்றாக கலந்து மறைந்து போனார்.



என்னது திருமணமா? அதை பற்றிய எந்த சிந்தனையும் என்னிடம் இல்லையே, இவர் என்ன இப்படிக் கூறுகின்றார். ஒரு வேளை திருமணம் நடக்குமோ என்றவாறே சைக்கிளை மிதிக்க ஆரம்பித்தேன்.

மெல்ல பொழுது விடிந்து கொண்டிருந்தது. தைமாத பின்பனிக் காற்று முகத்தில் மோத மெதுவாய் வீடு வந்து சேர்ந்தேன். நான் வீட்டிற்குள் நுழைந்தபோது என் அம்மா அழுது அழுது வீங்கிப்போன முகத்துடன் எதிர்பட்டார்கள்.

அந்தக்காலம் எங்களது வாழ்க் கையில் புயல் அடித்துக் கொண் டிருந்த நேரம். எங்களது குடும்ப பிரச்சனையை சமாளிப் பதற்காக நான் உடனே சென்னை செல்ல வேண்டியிருந்தது. யோசிப்ப தற்குக் கூட நேரமில்லாமல் புறப்பட்டேன். நல்ல மழை. வானம் யாருக்காக அழு ததோ தெரியவில்லை. நிற்காமல் அழுது கொண்டே இருந்தது.

மழையின் காரணமாக சற்று தாமதமாக சென்னைக்குச் சென்றேன். சென்றதும் தான் தெரிந்தது. ஏன் வந்தோம் என்று. இரவு மணி பத்து. தங்க இடம் இல்லை விதியை நொந்து கொண்டு உடனடியாக ஊருக்கு திரும்ப வேண்டிய கட்டாயம். இரவு பதினோரு மணிக்கு பேரூந்து நிலையத்தில் நிற்கின்றேன். இன்னும் மழை விட்டபாடில்லை. குடந்தைக்கு பேரூந்து வருவதாய் தெரியவில்லை.

12 மணிக்கு திருவண்ணாமலைக்கு கடைசிப் பேருந்து புறப்பட, என் குழப்பமான மனம் உடனே அதில் சென்று ஏறிக்கொள் என்றது. சற்றும் தாமதிக்காமல் ஏறிக்கொண்டேன். விடிந்ததும் திருவண்ணாமலை வந்து சேர்ந்தேன். திருவண்ணாமலை வந்த தும்தான் அன்று பவுர்ணமி என்று தெரிந்தது.

பேரூந்தை விட்டு இறங்கியதும் எனது கால்கள் விடுவிடு வென நடந்து ரமணாசிரமம் வந்து சேர்ந்தது. மனதிற்குள் குடைந்து கொண்டிருந்த துன்பங்களை ரமணரிடம் கொட்டித் தீர்க்கின்றேன். மனம் சற்று அமை தியடைகின்றது. மாலைவரை ஆஸ்ரமத் திலேயே அமர்ந்து இருக்கின்றேன்.

என் அருகே அமர்ந்திருந்த ஒரு ஆங்கிலேயர் தன்னுடைய நண்பரிடம், ராம் சூரத் குமார் ஆஸ்ரமம் செல்லலாம் வா என்று அழைத்தார். அவரும் புறப்பட, இருவரும் புறப்படும் நேரம், என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. என்னைப்பார்த்து நீங்களும் எங்களுடன் வரலாமே என்றனர் ஆங்கிலத்தில். சற்றும் தாமதிக்காமல் உடனே நானும் அவர்களுடன் புறப்பட்டுவிட்டேன்.

மூவரும் ராம்சூரத் குமார் ஆஸ்ரமம் சென்றோம். ஆஸ்ரமம் அப்போதுதான் கட்டப்பட்டுக்கொண்டிருந்தது. யோகி ஒரு பெரிய திடலில் நடுநாயகமாக அமர்ந்து கொண்டு இடைவிடாமல் புகைத்துக் கொண்டே இருந்தார், பக்தர்கள் வரிசையில் நின்று ஒவ்வொ ருவராக யோகியை தரிசித்துக் கொண்டி ருக்கின்றனர்.

சிலரை பார்த்து சிரிக்கின்றார். சிலரை பார்க்காமலே போ, போ என்று விரட்டுகின்றார். சிலரை அருகே அழைத்து புரிந்து கொள்ளமுடியாதபடி ஏதோ கூறுகின்றார்.

எனக்கு முன்னால் சென்ற இருவரும் யோகியை விழுந்து வணங்க அவர்களை ஆசீர்வதிப்பது போல் கைகளை மேலே தூக்கி காட்டுகின்றார். அடுத்து என் முறை நான் அவரை நோக்கி நடக்க ஆரம்பித்ததுமே முகத்தை திருப்பிக்கொண்டார். எனக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு கீழே விழுந்து வணங்கிவிட்டு வந்து விட்டேன். கடைசிவரை அவர் என்னை திரும்பிப் பார்க்கவே இல்லை.

வரும் போது அவமானத்தால் கூனி குறுகிப்போனது போல் உணர்ந்தேன். எல்லோரையும் ஏதாவது ஒன்றைக் கூறினாரே. அப்படியாவது என்னிடம் ஏதாவது பேசியிருக்கலாமே! என்னைப் பார்த்ததும் முகத்தை திரும்பிக்கொண்டாரே! ஏன்? என் மனம் சொல்லொன்னா துன்பத்தை அனுபவித்தது. கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.

ஆஸ்ரமத்தை விட்டு வெளியே வந்தேன். கட்டுமான வேலை நடந்து கொண்டிருந்ததினால் பவுர்ணமி கிரிவலத்திற்கு வந்த பக்தர்கள் ஆங் காங்கே படுத்திருந்தனர். அவர் களுக்கி டைய நானும் சென்று அமர்ந்தேன்.

வெகுநேரம் என் மனதில் யோகி என்னை உதாசீனப்படுத்திய காட்சியே திரும்பத் திரும்ப வந்து கொண்டே இருந்தது. சே, இனிமேல் இவரைப் பார்க்கவரக் கூடாது. இதுவே கடைசி என்றவாறே என்னை சமாதானப்படுத்தி கொண்டே பக்தர்களுடன் சேர்ந்து மணலில் படுத்து தூங்கிப்போனேன்.

தூக்கத்தில் கனவு, நான் ஒரு மலை மீது ஏறிக்கொண்டு இருக்கின்றேன். கடினமான மலைப்பகுதி ஏறமுடியாமல் தயங்கி நிற்கின்றேன். அப்போது மேலி ருந்து ஒரு பெரியவர் ஒரு கனமான

கயிறை வீசி அதைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறிவரக் கூறுகின்றார். நான் அதை உதாசீனம் செய்து, கற்களைப் பிடித்துக் கொண்டே ஏறுகின்றேன்.

கயிறு வீசிய பெரியவர் ஏதும் கூறாமல் கயிறை சுருட்டிக்கொண்டு பேசாமல் போய்விடுகின்றார். நான் மிகுந்த சிரமப்பட்டு மலைமீது ஏறிப் போய் பார்க்கின்றேன். அங்கே எனக்கு முன்பாக அந்தப் பெரியவர் அமர்ந்திருக்கின்றார். நான் அவரை சமாதானப்படுத்தலாம் என்று அவர ருகே சென்றால் அவர் தன் முகத்தை சட்டென்று திருப்பிக் கொண்டார்.

நான் அவரிடம் வலியப்போய் எனக்கு கயிறு பிடித்து ஏறிப் பழக்கம் இல்லை சுவாமி, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் என்று கூறுகின்றேன். அதற்கு அவர், இல்லை, இல்லை அது உன் அகங்காரம். உன்னை விட்டு எப்படி போகும். இப்படித்தான் கொஞ்ச நாட்களுக்கு முன் நாவல்பழம் விற்கும் பெண் என்னைப்பற்றி கூறியும் கூட நீ வந்து என்னைப் பார்க்கவில்லை. அவ்வளவு அகங்காரம் உனக்கு. நான் தான் போனால் போகின்றது என்று பசியோடு இருந்த உனக்கு சாப்பிட பூரிக் கிழங்கு அனுப்பினேன் தெரியுமா?

நான் உன்னிடம் வரும் போதெல் லாம் என்னை உதாசீனப்படுத்திவிட்டு, நான் ஒரு முறை முகத்தை திருப்பிக் கொண்டதற்கு நான் உதாசீனம் செய்து விட்டதாக அழுது புலம்புகின்றாயே! நான் உன்னை என்ன செய்வது என்ற வாறே என்னை செல்லமாக அடிக்க பாய்கின்றார். அத்துடன் கனவு முடிந்தது.

விழித்து எழுந்த எனக்கு கன வின் அர்த்தம் புரிய, எழுந்து சென்று காலைகடன்களை முடித்து குளித் துவிட்டு மீண்டும் யோகியை சந்திக்க பக்தர்கள் நிற்கும் வரிசையில் சென்று நின்றேன். அப்போது மணி காலை 8.

அப்போதெல்லாம் யோகி ஒரு இடத்தில் இருக்கமாட்டார்கள். திரு வண்ணாமலையில் எங்காவாது ஒரு தேனீர் கடையில் தேனீர் குடித்துக் கொண்டோ அல்லது, புகை பிடித்துக் கொண்டோ நிற்பார்கள்.

ஆஸ்ரமத்தை சேர்ந்த முக்கியஸ் தர்கள் காரை எடுத்துக் கொண்டு அவர் எங்கிருக்கின்றாரோ அங்கே சென்று அவரை அழைத்து வருவார்கள். அன்றும் அப்படித்தான் அவரை கூட்டிவர கார் புறப்பட்டது.

காலை 12 மணி இருக்கும் யோகி யுடன் கார் ஆஸ்ரமத்திற்குள் நுழைந்தது. பகதர்கள் வரிசை மெது வாய் நகர சரி யாய் ஒரு மணிக்கு யோகியை நான் சந்தித்தேன்.

எனக்கு முன்பாக சென்ற ஒருவர் யோகிக்கு புதிய சால்வை ஒன்றை அணிவிக்க, யோகி உடனே அதை தன் கைகளாலேயே துண்டு, துண்டாக கிழித்தார். கிழித்த துண்டுகளை மாலை போல் தன் கழுத்தில் போட்டுக் கொண் டவர். ஒரே ஒரு துண்டை சால்வை அணிவித்தவரின் கழுத்தில் அணித்து, அவ்வளவுதான் வாழ்க்கை என்றார்.

நான் மனதிற்குள்ளாக அவரை உதாசீனப்படுத்தியதற்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டே நின்றேன்.

சால்வை அணிவித்தவர் நகர்ந்ததும் கனவின் அர்த்தம் புரிந்ததா என்பதைப் போல் என்னைப் பார்த்து மந்தகாசமாக சிரித் தார். தன் இரு கைகளையும் தலைக்குமேல் உயர்த்தி என்னை ஆசீர்வதித்தார். தட்டில் இருந்த ஒரு லட்டை எடுத்து என்னை நோக்கி எறிந்தார். நான் அதை லாவகமாகப் பிடித்துக் கொண்டேன். ஆனந்தமாக நெடுஞ்சான்கிடையாக விழுந்து வணங்கி எழுந்தேன்.

- (தொடரும்)

சொந்த விருப்பம்



இவ்வுலகினில் ஆண்டவனின் சித்தமே இறுதியானது. மனிதர்களின் சொந்த விருப்பத்திற்கு ஓர் எல்லை உண்டு. நீங்கள் விரும்பியதை எல்லாம் செய்ய உங்களுக்கு உரிமை இல்லை. நீங்கள் பறவையைப் போல் பறக்க முடியாது. அத்தகைய வரமுறைகள் பல இருக்கின்றன.

உங்கள் விருப்பத்திற்கு ஓர் எல்லை உண்டு. அந்த எல்லைக்குட்பட்டு சிலவற்றை செய்ய உங்களுக்கு உரிமை உண்டு. அவ்வாறு செய்யக்கூடியவை என்ன வென்றால், பிற உயிர்களுக்கு உதவி புரிதல், சேவை செய்தல், இணைந்த பயனுள்ள வாழ்க்கையை நடத்துதல்.

நீங்கள் இவைகளை செய்வதற்கும், செய்யாமல் இருப்பதற்கும் உரிமை உண்டு. நீங்கள் செய்யும் செயல்களின் விளைவுகளை தாங்குவதற்கும் உரிமை உண்டு. மற்றவர்கள் உங்களின் செயலில் எது சரி, எது தவறு என்று சொல்வார்கள். ஆனால் எவரும் உங்கள் சொந்த விருப்பத்தில் தலையிட மாட்டார்கள்.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

தொடர் –3

சாய் சரவணன்

"அதி தேவதை"

நாம் சற்குருவான ஸ்ரீ சாயிநாதரின் எண்ணற்ற பக்தர்களின் கதைகளின் வாயிலாகவும், பக்தர்களின் வாழ்வில் சாயிநாதர் செய்த அற்புத லீலைகள் மூலமாகவும் தான் அவரை பற்றி அறிந்து கொள்கின்றோம். அனைத்திற்கும் பாபா விரும்புவது பக்தி ஒன்றையே! வேறு எதையும் அவர் ஏற்றுக்கொள்வதில்லை.

பக்தி மார்க்கத்தில் பாபாவிடம் சரணடைந்தவர்கள் பலர் இருக்கின்றார்கள். இருப்பினும், தெய்வத்திடம் காட்டிய அதே பக்தியை குரு வான சாயிநாதரிடம் காட்டிய அடியவர்கள் என்றால், அது ஸ்ரீ இராதா கிருஷ்ணமாயியையே குறிக்கும்.

அன்னையின் பக்தியே அனைவருக்கும் எடுத்துக் காட்டாய் விளங்கியது. அன்னையின் தூய்மை யான பாவ பக்தியை,பிரேம பக்தி யை, மதுர பக்தியின் மூலமாக அவளது தியாக வாழ்வைப் பற்றி இக் காவியத்தில் முடிந்த வரை அனுபவித்து சாயிநாதரின் அருளைப் பெறலாம்.

ஒரு மாமரத்தில் பழம் பழுத்து தொங்கினால் யோசிக்காமல் போய் பறித்து சாப்பிட்டுவிட வேண்டும். அதை விட்டு விட்டு இந்த மரத்தை யார் நட்டார்கள், எப்பொழுது நட் டார்கள், இந்த மாங்கனி எந்த வகையைச் சேர்ந்தது என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தால் பழுத்த கனி நமக்கு கிடைக்காமல் போய்விடும்.

அதைப்போலவே, பகவான் சாயிநாதருடைய பிறப்பைப்பற்றி ஆராய்ந்தால் ஒன்றும் கிடைக்காது. நமது சாயிநாதரைப் போலவே எண்ணற்ற மகான்களின் பிறப்பு, பூர்வீகம் பற்றிய எந்த தகவல்களும் கிடைக்கவில்லை.

ஆயினும் சில மகான்களின் பூர்வீகங்கள், தாய், தந்தை, பிறப்பை பற்றிய ஆதாரங்கள் காணக் கிடைக் கின்றன. அதைப்போலவே நமது சுந்தராபாயி ஆன ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயியின் பூர்வீகம், தாய், தந்தை மற்றும் அவளது தொடக்க வாழ்வைப் பற்றிய சில செய்திகளை பாபாவின் கருணையால் அடியேன் னதெரிந்து கொண்டேன்.

19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எண்ணற்ற மகான்களின் வரிசையில் பெண்களின் சமுதாயத்திற்கே வழிகாட்டியாய், எடுத்துக்காட்டாய் விளங்கிய அன்னை ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயியே மிக உயர்ந்த பிரேம ரத்தினமாகத் திகழ்ந்தாள்.

இத்தகைய ரத்தினமானது, பாரத பூமியில் வேணுதாயி மற்றும் கணேஷ் ஷீர்ஸாகர் எனும் அற்புத தம்பதிக்கு 1882 ல் மகளாக பிறந்தது. பனித தம்பதியினரும் தன் மகளை சீராட்டி வளர்த்தனர். " சுந்தராபாய் ஷீர்ஸாகர்" என்னும் நாமத்தை சூட்டினர். குழந்தையில் இருந்தே தன் மகளுக்கு பண்டரிநாதனின் மகிமையை கூறி வளர்த்தனர்.

சுந்தராபாய்க்கு தெளிந்த கூர்மை

யான அறிவு இருந்தபடியால், பாண்டு ரங்கனின் மீது பக்தி இருக்கவே செய்தது. விதிப்பயனால் சுந்தராபாயின் பெற்றோர் சிறுவயதிலேயே காலமா னார்கள். அதன்பிறகு சுந்தராபாய் அகமத்நகரில் உள்ள அவளது தாத்தா வீட்டில் வசித்து வந்தாள்.

நானாசாகேப் சாந்தோர்கர் சுந்தரா பாய் சிறுவயதாக இருக்கும் போதே கண்டிருக்கின்றார்.அவளது தாத்தாவான பாபு சாஹேப் கணேஷ் ஷீர்ஸாகர் நானாசாகேப்பின் நண்பராவார். சுந்தரா பாயிக்கு பிக்கு பாய் என்ற ஒரு சிநேகிதி உண்டு. பிக்குபாயி எப்போதும் சுந்தரா பாயுடன்தான் இருப்பாள். இருவரும் இணையற்ற தோழிகள்.

சுந்தராபாய் சிறுவயதில் இருந்தே பண்டரிபுர விட்டலின் மீது மிகுந்த பக்தி கொண்டவளாக காணப்பட்டாள். விட்டலன் மீது அவள் பக்தி கொள்ள அவளது தாத்தா நிறைய பாண்டுரங்கனின் கதைகளைக் கூறி அவளின் மனதை பாண்டுரங்கனின் திருவடியில் பற்றுதல் கொள்ள வைத் தார். அடியார்களை விட்டலன் ஆளும் விதத்தையும், பக்தருக்காக அவன் எதையும் செய்வான் என்பதையும் கூறி, பக்தியை ஊட்டி பிரேமையை காட்டி வளர்த்தார் அவளது தாத்தா.

சிறு வயதில் இருந்தே பழகிய பக்தியின் விளைவாக சுந்தராபாய் விட்டல் மீது காதல் கொண்டு, புராண இதிகாசங்கள், சாஸ்திரம், சங்கீதம், நாட்டியத்தால் சித்திரம் வரைதல், என அனைத்திலும் தேர்ச்சி அடைந்து தேவதைப் போல் மிளிர்ந்தாள். இவ்வாறு சுந்தராபாயின் வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கும் போது விட்டலன் அவளது மதுர பக்தியை பக்தர்களுக்கு காட்டிட ஒரு லீலை செய்தான்.

தாத்தாவான கணேசனுக்கு, தன் பேத்திக்கு திருமணம் செய்து வைக்க ஆசைப்பட்டார். சுந்தராபாயின் மனமோ சதா விட்டலனையே நினைத்தபடி அவன் புகழை பாடிய வண்ணமே இருந்தாள். ஒரு நாள் தன்னுடைய விருப்பத்தை தன் பேத்தியிடம் வெளியிட, தாத்தாவின் கவலையைப் போக்க, சற்றும் சிந்திக்காது திருமணத் திற்கு ஒப்புக்கொண்டாள் சுந்தராபாயி. தாத்தா நல்ல மாப்பிள்ளையை தேட ஆரம்பித்தார்.

அதற்கு விட்டலனின் கருணையும் இருந்தது. அகமத் நகருக்கு அருகில் இருக்கும் சங்கம்நேர் என்னும் ஊரிலேயே மாப்பிள்ளை கிடைக்கும் படி செய்தார் பகவான். ஒரு நல்ல சுபமுகூர்த்த நாளில் சங்கம்நேரில் திருமணம் நடந்தேறியது.

சுந்தராபாயின் கணவரிடம், அவளது தாத்தா, அவள் விட்டல் மீது கொண்ட பக்தியையும், அவளுக்கு விட்டலைத்தவிர எதுவும் தெரியாது



என்று கூறி அவளை நன்றாக பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டு ஊர் திரும்பினார்.

மாப்பிள்ளையின் வீட்டிலேயே விட்டலுக்கு சிறிய சன்னிதானம் உண்டு. அதைப் பார்த்த உடன் சுந்தராபாயி தன்னை மறந்து விட்டலை பாட ஆரம்பித்து விட்டாள். புகுந்த வீட்டில் உள்ளவர்களோ, அவளின் பக்தி மனோபாவத்தை புரிந்து கொள்ள முடியாமல் இவளுக்கு என்னவாயிற்று இவள் ஏன் இப்படி இருக்கின்றாள் என்று அங்கலாய்த்தார்கள்.

கட்டிய கணவனோ விட்டலின் பக்தர். அவர் சுந்தராபாயின் விட்டலின் மீதான பக்தியைக்கண்டு ஆனந்தம் கொண்டார். பிறகு தன் வீட்டாரிடம், யாரும் அவளை தொந்தரவு செய்ய வேண்டாம் என்று கூறிவிட்டார். சுந்தராபாயும் பூஜை அறையை விட்டு வெளியே வருவதே இல்லை.

வீட்டு கடமைகளை செய்தபின் பூஜை அறைக்கு சென்று விட்டலை துதிப்பதும், ஆராதிப்பதுமாக இருப்பாள். சுந்தராபாயின் தெய்வீகக் குரலில் இருந்து வந்த விட்டலின் துதிகள் அவளது கணவரின் மனதில் சாந்தத்தை ஏற்படுத்தியது. அதனால் அவளை ஒருபோதும் தனக்கு சேவை செய்யும் படி கட்டாயப்படுத்தவில்லை.

வீட்டில் உள்ளவர் அவளைப்பற்றி கேட்கும் போது, அவளை அப்படியே விட்டுவிடுங்கள். காலம் மாறும் என்று சமாளிப்பார். நாள்தோறும் சுந்தராபாயின் குரலில் வரும் இறைவனின் துதி கேட்டு, கேட்டு அவர் மனம் சுகபோகத்தை விட்டு ஆத்ம சுகத்தை நோக்கி நடைபோட்டது.

இப்படியே மூன்று நாள் சென்ற அவர்களது வாழ்க்கை. நான்காம் நாள் காலையில் நின்று போனது. ஆம் சுந்தராபாயின் கணவர் நான்காம் நாள் காலை திடீரென இறந்து போனார். கணவனின் நிலை கண்டு சுந்தராபாயி இடிந்து போனாள். வீட்டில் உள்ள அனைவரும் அவளையே குற்றம் கூறி திட்டித் தீர்த்தனர்.

உண்மையை யார் கண்டார்கள்? என்ன பாக்கியம் கிடைத்ததோ சென்ற வருக்கு? இறைவனின் திருவடியை அவர் அடைந்தார் என்ப தில் எள்ளவும் சந்தேகம் இல்லை. செய்தியை அறிந்த சுந்தராபாயின் தாத்தா அலறி அடித்துக்கொண்டு வீடு வந்து சேர்ந் தார். தன் பேத்தியின் வாழ்வு இளம் வயதிலேயே பறிபோனதை எண்ணிக் கலங்கினார். பின்னர் ஒருவாறாக மனதை திடப்படுத்திக்கொண்டு, தன் பேத்தியை அழைத்துக்கொண்டு பண்டரிபுரத்திற்கு வந்து விட்டார்.

தன் நிலையை நினைத்து மனம் உடைந்து போனாள் சுந்தரா பாயி. ஊராரின் பேச்சு,மனதை காயப் படுத்தினாலும், தாத்தாவின் அரவ ணைப்பும், தோழி பிக்குபாயின் அன் பும், பகவான் விட்டல் மீதிருந்த பக்தி யும் அவளை இப்பெரும் துக்கத்தில் இருந்து வெளியே கொண்டு வந்தது.

உலக பழக்க வழக்கங்களை விடுத்து மனதை ஒருநிலைப் படுத்த பகவான் விட்டலன் மீது பக்தியை அதிகரிக்கச் செய்ய வேண்டி சதா அவன் நாமம், அவனது தியானம், பஜனை என்று தன் வாழ்வை விட்டவனின் பாதத்தில் சமர்ப்பித்தாள். இந்த அத்தியாயம் இங்கு நிறைவடைகின்றது.

அடுத்த அத்தியாயத்தில் சுந்தராபாயின் வாழ்வில் அவளுக்கு ஏற்பட்ட மாற்றம் மற்றும் வைராக்கியத்தைப் பற்றி காண்போம்.

அன்பு



நீங்கள் அன்பு செலுத்த விரும்பினால், அதை எவ்வாறு செலுத்துவது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். உண்மையான அன்பு என்பது பிறர் நலனை நாடுவதாகும். நீங்கள் எப்போதும், எங்கேயும், உங்களை முதல் இடத்தில் வைக்க முயலாதீர்கள். பிறரையும், அவர்களது நலனையும் முதலிடத்தில் வைத்துப் பழகுங்கள்.

நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் பிறருக்காக செய்வது என்று தீர்மானியுங்கள்.கைமாறு கருதாமல் அன்பு செலுத்துங்கள். கைமாற்றை எதிர்பார்த்தால் அது அன்பாகாது.

கைமாறு கருதி அன்பு காட்டுவது வியாபாரம் போன்றது. நீங்கள் அத்தகைய அன்பால் மகிழ்சியாக இருக்க முடியாது.சிக்கல்கள் அனைத்தும் அதனாலேயே ஏற்படுகின்றது. கணவன், மனைவிக்கு இடையேயான உறவு, இரு நண்பர்களிடையே உள்ள உறவு, ஒருவருக்கு ஒருவரிடமிருந்து கிடைக்கும் நன்மையைப் பொறுத்து என்றால், நீங்கள் நிம்மதியான மகிழ்சியைப் பெற முடியாது

அடுத்தவர் நீங்கள் எதிர்பார்ப்பதை கொடுக்க இயலாதவராக இருக்கலாம். ஆகையால் எதையும் எதிர்பார்க்காமல் அன்பு செலுத்துவீராக!.

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

பாபாவின் முதல் பூஜாரி

பாபு சாஹிப் ஜோக்

திரு.பாபு சாஹிப் ஜோக் அரசுப் பணி செய்தவர். அவருக்கு குழந்தைகள் இல்லை. தனது ஓய்வூதியத்தில் மனைவியுடன் நிம்மதியாகவும், வசதியாகவும் வாழ்ந்து வந்தார்.1909 ல் பணி ஓய்விற்குப்பின் தன் மனைவியுடன், பாபாவின் தரிசனத்திற்கு சீரடிக்கு வந்தார்.

பாபா, பாபு சாஹிபின் மீது மிகுந்த அன்பு செலுத்தினார். எந்தளவிற்கு என்றால் அவரை திரும்ப அவரின் வீட்டிற்கு செல்ல அனுமதிக்கவில்லை. வீட்டில் இருந்து அவருக்கு தேவையான பொருட்களைக் எடுத்துவர கூட அவரை அனுப்ப மறுத்து விட்டார்.

பாபு சாஹிப் சீரடியில் சாதே வாடாவில் தங்கியிருந்தார். அங்கே சக பக்தர்களால் மன உளைச்சலுக்கு ஆளானவர் தான் திரும்ப ஊருக்கே செல்லப் போவதாக கூறினார். அதை கேள்விப்பட்ட பாபா அவரிடம், " வாடா என்ன சாத்தேயின் அப்பனுக்கு சொந்தமானதா"? உன்னை தொந்தரவு செய்ய வேண்டாம் என்று தாதா கேல்கரிடம் கூறுகின்றேன். நீ அங்கேயே நிம்மதியாக தங்கியிரு சரியா, என்று அன்போடு கூறினார்.

பாபாவின் அன்பான வார்த்தை களால் ஈர்க்கப்பட்ட பாபு சாஹிப் தொடர்ந்து அங்கேயே தங்கலானார்.

பாபு சாஹிப் ஆச்சார அனுஷ் டானங்களை தீவிரமாக பின்பற்றக்கூடிய பிராமணர். நீதியும், நேர்மையோடு



அறவழியில் நடக்கக் கூடிய தர்மவா னாக இருந்தார். அவரது மனைவியும் அப்படியே! அவரை பாபா எப்போதும் அன்புடன் ஆயி என்று அழைப்பார்.

பாபு சாஹிப் ஒரு தத்த உபாசகர். அடுத்தவருக்கு ஒருபோதும் இடைஞ் சல் தராதவண்ணம் தன் சாதனையை அமைதியாக செய்து வந்தார். தத்த ஜெயந்தி அன்று ஸ்ரீ தத்தருக்கு, நைவேத்தியமும், ஒரு கப்னியும் சமர்ப்பிப்பது வழக்கம்.

அந்த வருட தத்த ஜெயந்தி அன்று அவர் சீரடியில் இருந்ததால், பாபாவிற்கு

ஒரு கப்னியை அளிக்கவேண்டும் என்று முடிவு செய்தார்.

சீரடியின் தையல்காரரும், பாபாவின் பக்தருமான பாலாஷிம்பியிடம் பாபா விற்காக ஒரு கப்னியை தைத்து வாங்கிக் கொண்டார். தத்த ஜெயந்தியன்று பாபாவிற்கு பூஜை செய்த பின்பு கப்னியை பாபாவிடம் சமர்ப்பித்தார். அதை மனமுவந்து ஏற்றுக்கொண்ட பாபா, தன்னுடைய வேறு ஒரு கப்னியை பாபு சாஹிபிற்கு பிரசாதமாக அளித்தார்.

அதை மிகுந்த மகிழ்சியோடு ஏற்றுக்கொண்ட பாபு சாஹிப் அதை பொக்கிஷமாக பாதுகாத்தார். மாலை வேளைகளில் அதை அணிந்து கொண்டு தலையைச் சுற்றி ஒரு வெள்ளைத் துணியைக் கட்டிக்கொண்டு அவர் பாபாவின் தரிசனத்திற்கு செல்வதே ஒரு அழகுதான். பாபு சாஹிப் அதை இராஜ உடை என்று கூறுவார்.

பாபு சாஹிப் மிகவும் இளகிய மனம் படைத்தவர். ஆனால் அவர் செய்து வந்த பணி அவரை சற்று, முன் கோபியாக மாற்றிவிட்டது. அவர் அடுத்தவர்களின் பார்வையில் சற்று கோபக்காரராக காணப்பட்டார். ஆனால் பாபா அவரை படிப்படியாக மாற்றிவிட்டார்.

மிகவும் சிக்கனமாக வாழ்ந்த அவர் கணிசமான தொகையை சேமித்து வைத்திருந்தார். தனது சேமிப்பின் மீது சிறிது கர்வம் இருந்ததை பாபா அறிந்திருந்தார். எனவே அவரிடம் இருந்து மீண்டும், மீண்டும் தட்சணை கேட்டு அவருடைய சேமிப்பு முழுவதையும் கரைத்துவிட்டார். இதன்முலம் அழியும் செல்வத்தின் மீது பற்று வைக்கக்கூடாது என்ற பாடத்தை பாபு சாஹிப் கற்றுக் கொண்டார்.

எனவே மாதந்தோறும் தன்னுடைய ஒய்வூதியத்தில் அந்த மாத செலவுபோக மீதம் எவ்வளவு இருக்கின்றதோ அதை அப்படியே கொண்டுவந்து பாபாவின் காலடியில் வைத்து விடுவார்.

அவர்மீது முழு நம்பிக்கை வைத் திருந்த பாபா, தடசணையின் முலம் தனக்கு வருகின்ற பணத்தையும் அவரிடம் கொடுத்து வைப்பது வழக்கம். பாபு சாஹிப் இது பாபாவின் பணம் என்று அதை தனியாக வைத்திருப்பார்.

தேவைப்படும் பொழுது பாபா அவரிடம் அந்த தொகையை கொண்டு அதை வாங்கு, இதை வாங்கு என்று கூறுவார். பாபா சில நேரங்களில் அவரிடம் ரூ.100 ஐ கொடுத்துவிட்டு சில தினங்கள் கழித்து, வேண்டும் என்றே வேடிக்கையாக பாபு சாஹிப் நான் சில தினங்களுக்கு முன்பு உன்னிடம் ரூ.125 கொடுத்தேனல்லவா, அதை எடுத்துவா என்பார்.

பாபு சாஹிப், பாபா நீங்கள் ரூ 100 தான் கொடுத்தீர்கள் என்று கூறுவார். இப்படியே அடிக்கடி நடக்கும். ஒரு முறை பாபு சாஹிபிற்கு கோபம் வந்து விட்டது. சற்று எரிச்சலாக பாபாவிடம், இனிமேல் உங்களது பண விவகாரங்களில் தலையிட எனக்கு விருப்பமில்லை. இனிமேல் அதை வேறு யாரிடமாவது கொடுத்து வைத்துக்





கொள்ளுங்கள். என்று கூறினார்.

பாபாவோ அவரை சமாதானப்படுத்தும் விதமாக, பாபு சாஹிப், சரி,சரி, கோபப்படாதே, நான்தான் தப்பாக கணக்குப் போட்டுவிட்டேன். நான் கொடுத்தது 100 ரூபாய்தான் சரியா என்று கூறுவார்.

ஒருமுறை ஒரு பக்தர் பாபாவிடம் கினியா நாணயத்தை சமர்ப்பித்தார். பாபா அதை பாபு சாஹேப்பிடம் கொடுத்து, இது என்ன? என்று கேட்டார. அதற்கு அவர், இது கினியா என்றும் அதன் மதிப்பு 15 ரூபாய்க்கு சமமானது என்றும் கூறினார். பாபாவோ, இல்லை இல்லை இது 30 ரூபாய் மதிப்புள்ளது. இது வைத்துக்கொண்டு 30 ரூபாய் கொடு என்றார்.

19.01.1912 ல் பாபாவின் நெருங்கி அடியவரான மேகா மறை விற்குப் பிறகு, பாபாவின் விஷயங்களை அனைத்தையும் பாபு சாஹிப்தான் பார்த்துக்கொண்டார். 1918ல் பாபாவின் மகாசமாதிவரை அவருக்கு ஆரத்தி செய்யும் பெரும் பேறு கிட்டியது.

அதுநாள்வரை மேகா செய்து வந்த சேவைகள் அனைத்தும் பாபு சாஹிப்பின் பொறுப்பில் வந்தது. துவாரகாமாயியில் பாபாவிற்கு ஆரத்தி, சாத்தே வாடாவில் மாலை ஆரத்தி,தீட்சித் வாடாவில் ஆரத்தி, மற்றும் குருபாதுகாவில் ஆரத்தி, அனைத்தையும் பாபு சாஹிப் செய்யத் தொடங்கினார்.

பாபு சாஹிப் தன் கடமைகளை வெகு சிரத்தையுடன் செய்வார். வழக்கமாக ஆரத்திக்கு ஏராளமான பக்தர்கள் கூடுவார்கள். இருந்த போதிலும், எப்போதாவது ஒரு சிலரே இருந்தாலும் அல்லது யாருமே இல்லாவிட்டாலும் கூட அதை பொருட்படுத்தாமல் வழக்கமான அதே பக்தியுடனும், சிரத்தையுடனும் ஆரத்தியை செய்வார்

பாபு சாஹிப்பின் மனைவி தாய் பாய்யும் தர்மத்தின்படி அறநெறியில் வாழ்பவரே. அவர்கள் இருவரும் அதிகாலையிலேயே எழுந்து குளித்து முடித்து ஆச்சார அனுஷ்டானங்களை முறைப்படி செய்து விட்டு புனித நூல் களை பாராயணம் செய்வர். அதன்பிறகு துவாரகாமாயிக்கு பாபாவின் தரிசனத்திற்குச் செல்வர்.

பாபு சாஹிப் பாபவின் அருகிலேயே இருந்து, பாபாவிற்கு தேவையான தினசரி கடமைகளை செய்வார். தாய்பாய் வீட்டிற்கு திரும்பி ஆரத்திக்கு தேவையான பிரசாத நைவேத்தியம் தயார் செய்வதோடு, பாபா அனுப்பி வைக்கும் எண்ணற்ற விருந்தினர்களை உபசரிப்பார்.

தாய்பாய் பக்தியின் இலக்கணமாக விளங்கினார். அவர் பாபாவிடம் அதி தீவிரமான பக்தி கொண்டிருந்தார். அவர் தன் குருவான பாபா மீது கொண்டிருந்த உணர்வுமயமான பிரேம பக்தி எந்த அளவிற்கு ஆழமானது என்

றால், பாபவின் சமாதிக்குப் பிறகு, அவர் தன் கட்டுப்பாட்டை இழந்தவராய் சீரடியின் தெருக்களில். குறிக்கோளின்று அலையத் தொடங்கினார்.

அவர் தன் குருவை தேடுகின்றார் என்று தெரிகின்றது. அவர் முகத்தில் வெறுமை நிலவியதோடு, அவரை சுற்றியுள்ள சூழலைப் பற்றி தன்னுணர்வே அவரிடம் இல்லை. பாபா இல்லை என்பதை எந்த அள விற்கு அவர் சூன்யமாக உணர்ந்தார் என்றால், அதன் பிறகு இரண்டே மாதங்களில் அவர் உயிர் துறந்தார்.

ஆச்சார அனுஷ்டானங்களை தீவிரமாக கடைபிடிக்கும் பழமை வாதியான பாபு சாஹிப் உணவு விச யத்தில் மிகவும் கண்டிப்பானவர். அதை விரத காலங்களில் தீவிரமாக கடைபிடித்தார் அது போன்ற நாட் களில் வெங்காயத்தை கூட கையால் தொட மாட்டார். இதை மதித்த பாபா விரத நாட்களில், அவரை தன்னோடு உணவுண்ண வற்புறுத்த மாட்டார்.

உண்மையில், பாபா வேறு சில பக்தர்களை பாபு சாஹிப்புடன் அவர் வீட்டிற்கு அனுப்பி அவருடன் உணவுஉண்டு வரச் செய்வார். பாபாவிற்கு பக்தர்கள் பழங்களையும், இனிப்புகளையும் சமர்ப்பிக்கும் பொழுது பாபா அப்படியே பாபு சாஹிப்பிடம் கொடுத்துவிடுவார்.

ஒருமுறை பாபு சாஹிப், பாபாவிடம் எப்போது தனக்கு சன்யாசம் வழங்கப் போகின்றீர்கள் என்று கேட்டார். அதற்கு பாபா, நீ உலகியல் பொறுப்புகளில் இருந்து முற்றிலுமாக விடுபட்ட பிறகு என்று பதிலளித்தார். இப்போது பாபா உடலோடு இல்லை. ஆகவே பாபாவிற்கு செய்ய வேண்டிய பொருப்புகளில் இருந்து விடுபட்டார். எனவே அவர் சில ஆண்டுகள் சீரடியில் தங்கியிருந்து பாபாவின் சமாதியை கவனித்துக் கொண்டார்.

காகா தீட்சித்தின் மறைவிற்குப் பின்பு, மற்ற பக்தர்கள் சீரடியை விட்டுச் சென்று விட்டனர். தனித்து விடப்பட்ட பாபு சாஹிப் சகோரிக்குச் செல்ல முடிவெடுத்தார். அங்கு அவர் சன்யாசம் ஏற்றுக்கொண்டார்.

சகோரிக்குச் செல்வதாக அவர் எடுத்த முடிவு அனைவருக்கும் ஆச்சரியத்தை அளித்து. ஏன் என்றால் உபாசினிக்கும், அவருக்கும் ஒருபோதும் ஒத்துப் போனதில்லை. ஒரு முறை பாபு சாஹிப் உபசினியை தரதரவென்று துவாரகாமாயிக்கு இழுத்து வந்தார்.

பிறகு தங்களுக்குள் நடந்த சண் டையின் காரணத்தை பாபாவிடம் முறையிட்டு, பாபாவிடம் நீதி வழங்கு மாறு கோரினார். அது பழைய கதை. இருப்பினும், அவர் பாபாவிற்கு எந்த அளவிற்கு பக்தியோடு சேவை செய்தாரோ, அந்த அளவிற்கு உபா சினிக்கும் சேவை செய்தார். ஒரு சன்யாசியாக அவர் உயிர் நீத்ததால், சகோரியில் உபாசினி ஆஸ்ரமத் திற்கு எதிரில் அவருக்கு சமாதி எழுப்பப்பட்டுள்ளது.



நம்ம வீட்டு கல்யாணம்

நமது அன்பிற்கும், பண்பிற்கும் உரிய "பிரார்த் தனை செம்மல்" அண்ணன் கலியன் சாய் அவர்களின் அன்புப் புதல்வி சுகன்யா வெற்றி கலையரசன் ஆகியோரின் திருமணத் திருவிழா பகவான் சாயிநா தரின் ஆசியால் கடந்த 09.09.2021 வியாழன் அன்று சேலம் மாநகரில் வெகு விமரிசையாக நடை பெற்றது.

அரசாணைக்கு உட்பட்டு திருமண விழா வினை மிக அற்புதமாக வடிவமைத்திருந்தனர் திரு. சாய் கலியன் குடும்பத்தினர். பகவான் சாயிநாதரின் ஆசியால் நிகழ்ந்த திரும ணம் என்பதற்கு மூன்று நிரூபணங்கள்.

ஒன்று, பிரம்ம முகூர்த் தத்தில் திரு மண ம் நிகழ்ந்தது, இரண்டு, வியாழக்கிழமை, மூன்று, சாயிநாதரால் அழைக்கப்பட்ட உறவினர்களும், நண்பர் களும் விழா நடைபெற்ற அரங்கம் முழுக்க நிரம்பியி ருந்தாலும், காதை கிழிக்கும் இன்னிசை கச்சேரிகள் இல்லாது, அமைதியாக, ஆனந்தமாக நிகழ்ந்தது இறை சாந்நித்தியத்தை உணர்த்தியது.



விழா, விஷேசங்கள் என்றால் மனவருத்தம் என்பது தவிர்க்க இயலாதது. இத்திருமண விழாவில் உறவினர்களிடையேயும், நண்பர்களிடையேயும் சிறு பிணக்கின்றி அனைவருக்கும் தேவையானதை செய்து, அனைவரையும் அனுசரித்துச் சென்ற அண்ணன்





கலியன் சாய் குடும்பத்தினர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்!

இல்வாழ்க்கையில் இணைந்திருக்கும் தம்பதியினர் பகவான் சாயிநாதரின் அருளால் எல்லா நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ்க வளமுடன் என்று அனைவரும் வாழ்த்துவோம்! **வாழ்க வளமுடன்!**

நான் யார்?



காரணமில்லாமல் எதுவும் நடப்பதில்லை. காரணம் நமக்கு பாடம் கற்பிக்க. நமக்கு ஏற்படக்கூடிய எதிலும் பாடம் இருக்கும். பொருள் நட்டம், உறவினர் இழப்பு என்று எல்லாவற்றிலும் படிப்பினை இருக்கும். உலகம் ஒரு பல்கலை கழகம். நாம் அதில் பயின்று வருகின்றோம். "நான் ஒருவனே மாணவன். மற்றவர் யாவரும் என் பேராசிரியர்கள்" என்று ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும்.

நமக்கு முன்பிருந்த குடும்பங்கள் எத்தனையோ? தந்தையர் எத்தனை பேரோ? தாயார் எத்தனை பேரோ? கணவன், மனைவியர்தான் எத்தனை பேரோ? மக்கள் எத்துனை பேரோ? நிகழும் வாழ்வு ஒன்றே நாம் வாழ்ந்தது என்று எண்ணாதீர்!

நாம் முன்னர் நூற்றுக்கணக்கான வாழ்க்கைகளை வாழ்ந்துள்ளோம். இன்னும் பல வாழ்க்கைகளை வாழலாம். எனினும் என்றும் மாறாத தாயும் தந்தையும் ஒன்றே. அதுவே பரப்பிரமம். பிற யாவும் பிறப்பை அறுக்க உதவும் புறப்பொருட்களே! ஒருவகையில் நம் உற்றார், உறவினர்கள் இந்த உண்மையை நமக்கு கற்பிக்கின்றனர். நாம் அதை புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்வோமாக!

மேல்சிறுணையில் சாயி தர்பார்

ஷிரடி சாய்பாபா கலியுகத்தின் அவதார் புருஷர். அவர் ஸ்ரீ தத்தாத்ரேயனின் 5 வது அவதாரம் என்பதை நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள். அவரது மகாசமாதியான 103 ஆண்டுகளுக்குப் பிறகும், அவரது புகழ் உலகம் முழுவதும் பரவி வருகிறது.


மிகவும் தொலை தூர இடங்களிலும், மதம், இனம் மொழி வேறுபாடின்றி அவரது சன்னதிகள் கட்டப்பட்டு அனைத்து மக்களாலும் வணங்கப்பட்டு வருகின்றன. பகவான் சாய்நாத் மகாராஜின் மகத்துவம் அப்படி.

சாயி நாதரைப் பற்றிய ஒரு சிறப்பான செய்தியை உங்களுக்குத் தெரிவிப்பது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது, என்னவெனில் அவருடைய ஏராளமான அருளைப் பொழிய அவர் மற்றொரு இடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் அருகே உள்ள மேல்சிருணை என்ற சிறிய கிராமத்தில் ஏற்கனவே நமது "ஸ்ரீ வல்லபா நந்தா மாயி" அவர்களால் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் திருக்கோவில் அமைக்கப்பட்டிருப்பதும் நாம் அறிந்ததே.

அத்திருக்கோவில் வளாகத்திலேயே துனியுடன் கூடிய அவரது திருக்கோவிலும் கட்டப்பட இருக்கின்றது. காஞ்சிபுரம், மேல்சிறுணையில் எண்.19 இல் உள்ள இந்த கோவில் சாயியின் அடுத்த உறைவிடமாக இருக்கும்.

ஸ்ரீ சாய்நாதரின் கோவில் மற்றும் துனியின் கட்டுமானத்தில் பங்கேற்க நம் அனைவருக்கும் வழங்கிய ஒரு வாய்ப்பு. எனவே இந்த உன்னதமான மற்றும் தெய்வீக நோக்கத்திற்காக தயவுசெய்து தாராளமாக நன்கொடை அளிக்கவும். நம்மில் பலர் கோவிலில் நன்கொடையை கவுண்டரில் வழங்கி இருக்கலாம், ஆனால் நம்மில் சிலருக்கு மட்டுமே பாபாவின் கோவில் கட்டுமானத்திற்கு பங்களிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது. நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்



களாக உணர்வோம்.

Donors may offer their donations to the Trust account details as below via under bank transfer or through Google PAY account:

Sree Chakra Datta Sree Pada Sree Sai Peadam Trust. (46/IV/2020)

Account number: 1650115000003059 (Current Account)

IFSC code: KVBL0001650

Bank Name: Karur Vysya Bank, Pallavaram, Chennai, Tamilnadu, India.

Google Pay: 9003217802

Website: https://sreechakradattasreepadapeadam.org/

Contact Numbers: +91 7305243994, 9884280482.

Jai Guru Datta.

தோல்வியை ஒப்புக் கொள்ளுங்கள்!

நீங்கள் உங்கள் வாழ்க்கையை செம்மைப்படுத்த விரும்புகின்றீர்களா? அப்படி எனில் ஒரே நாளில் செம்மை படுத்த முடியாது. நாம் வாழ்க்கையில் செய்யும் தவறுகள் செம்மையை அடையும் முயற்சியின் ஒரு பகுதி. நீங்கள் தவறு செய்வதற்காக மனம் கலங்க வேண்டாம். தவறு செய்ததற்கு காணமான சந்தர்ப்பத்தை கண்டு பிடியுங்கள். தவறுகளில் இருந்து பாடம் கற்றுக்கொள்ளுங்கள்.



செய்த தவறுகளை மீண்டும் செய்யாதீர். ஒவ்வொறு தவறும், ஒவ்வொறு தோல்வியும் எதிர்கால வெற்றிக்கு ஓர் படிக்கல்லாகும்.

செம்மையானவர்களின் பிரச்சனை என்னவென்றால் அவர்கள் தோல்வியை ஒப்புக்கொள்வதில்லை. தோல்வியை எந்தவித சமரசமும் இல்லாது ஒத்துக் கொள்ளுங்கள். அதுவை கற்றுக் கொள்ளும் முறை. விழுவதற்கு அஞ்சாதீர். நீங்கள் இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால், நான் செம்மையானவன் என்ற அகங்காரத்தில் மாட்டிக்கொள்ள மாட்டீர்கள்.

ஒவ்வொருவரும் இவ்வாறே கற்றுக் கொள்கின்றனர்.எவரும் நூற்றுக்கு நூறு செம்மையானவர் அல்ல. குறை சிறிதளவாவது இருக்கும். முழுச் செம்மையை அடையும் பொழுது நீங்கள் இவ்வுலகில் இருக்க மாட்டீர்கள்.

அப்துல்லா ஜானின் நினைவலைகள்..!

எனது சொந்த ஊர் பெஷாவர் அருகில் உள்ள தார்பெல்லா. எனக்கு ஆதரவளிப்பவர் யாரும் இல்லாததால் சிறுவயதிலேயே நான் ஊரை விட்டு வெளியேறிவிட்டேன். வெளிநாடு சென்று மெக்கா மதீனா போன்ற புனித தலங்களை காண விரும்பினேன்.

எனவே தெற்கு நோக்கி பயணம் செய்து மன்மாடு வரைக்கும் வந்தேன். அங்கே என் மீது பரிவு காட்டிய ஒருவர், நீ இங்கிருந்து பம்பாய் சென்றால் அங்கிருந்து மெக்கா செல்லலாம் என்று கூறினார். ஆனால் அதற்குமுன் சீரடி என்ற ஊரில் சாயிபாபா என்ற மகான் இருப்பதாகவும், அவர் பக்கீர்களுக்கு தாராளமாக பணம் கொடுத்து மெக்காவிற்கு அனுப்பி வைப்பதாகவும் கூறினார்.

எனவே நான் சீரடிக்குச் சென்றேன். நான் மசூதியின் நுழைவு வாயிலில் நுழைந்தபோது பாபா மைய்யக் கட்டிடத்தில் இருந்தார். நான் அவரைப் பார்க்க, அவரும் என்னைப் பார்த்தார். அக்கணமே சாயிபாபாவே எனது குரு என்று உணர்ந்தேன்.அதன்பிறகு சீரடியிலேயே தங்கிவிட்டேன்.

எனக்கும் இதர பக்கீர்களுக்கும் பெருமளவு உணவளித்து வந்தார் பாபா. அவருடன் சீரடியிலேயே தங்கி சொகுசாக வாழலாம் என்று முடிவெடுத்தேன். இது நடந்தது 1913 ல் அப்போது நான் இளைஞனாக இருந்ததால் வாழ்க்கையைப் பற்றி பெரிதாக ஒன்றும் யோசிக்கவில்லை.

பாபாவுடன் தங்கியது என் மனப் போக்கில் சில மாற்றங்களை உண்டு பண்ணியது. நான் சீரடிக்கு வந்த புதிதில் இந்துக்களை விரோதிகளாகக் கருதினேன். மூன்று ஆண்டுகள் பாபாவுடன் வாழ்ந்ததில் விரோத மனப்பான்மை மறைஅது இந்துக்களை சகோதரனாக பாவிக்கத் தொடங்கினேன்.

பாபா மறைந்தபோது எனக்கு வயது 22 அப்போது நான் ஆன்மீகத்தில் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு எந்தப் பயனும் பெறவில்லை. அது எனக்கு ஏமாற்றத்தை அளித்தது. எனவே 1926 ல் நான் மீண்டும் வடக்கு நோக்கி பயணம் மேற்கொண்டேன்.

அங்கே ஸ்வாத் பள்ளத்தாக்கில், முகம்மது நபி அவர்களின் நேர்வழித் தோன்றலான அகுன் பாபா என்ற மகானுடைய சமாதியைக் கண்டேன். அந்த நாட்களில் அகுன் பாபாவின் சக்திகள் பரவலாகப் பேசப்பட்டு வந்தன. நான் அங்கேயே சில காலம் தங்கினேன்.

ஒரு நாள் இரவில் நான் தூங்கப் போகும் சமயம் அகுன் பாபாபவிடம், என்னுடைய ஆன்ம முன்னேற்றத்திற்கு சாயிபாபா உதவ வில்லை. ஆகையால் என்னை நீங்கள் தான் உங்கள் பார்வையின் கீழ் கொண்டுவந்து உதவ



வேண்டும் என்று வேண்டிக்கொண்டு அவரின் சமாதிக்கருகில் படுத்துக் கொண்டேன்.

இரவில் எனக்கு ஓர் கனவு. கனவில் சாயிபாபா தோன்றினார். என் தலைமாட்டில் ஒரு நாற்காலியில் பாபா உட்கார்ந்திருக்கின்றார். அவர் ஏதும் பேசவில்லை.நான் விழித்ததும் கனவைப்பற்றி நினைவுப் படுத்தி பார்த்தபோது, இன்னமும் நான் சாயிபாபாவின் கண்காணிப்பில் இருந்து வருவதை உணர்ந்தேன்.

நான் தாங்கச் சென்ற போது, நான் பிரார்த்தனை செய்தது அகுன் பாபவிடம். ஆனால் கனவில் தோன்றியதோ சாயிபாபா. சீரடியில் இருந்து 1500 மைல்களுக்கப்பால் உள்ள ஸ்வாத் பள்ளத்தாக்கில் தாமாகவே என் முன்னால் தோன்றும் அளவிற்கு கருணையுள்ளம் படைத்தவர் சாயி.

நான் சீரடியில் தங்கிய ஐந்து ஆண்டுகளில் சாயி எனக்கு உதவாமல் ஏமாற்றி விட்டார் என்று நான் கொண்ட கருத்து தவறு என நிரூபிக்கப்பட்டது.

ஸ்வாத் பள்ளத்தாக்கில் நான் கண்ட கனவுக் காட்சி பாபாவின் மேல் எனக்கு நம்பிக்கையை வலுப்பெறச் செய்தது. நான் மீண்டும் சீரடிக்கே திரும்பி வந்து விட்டேன்.நான் முன்பைவிட பாபாவிடம் அதிக நம்பிக்கை கொண்டுள்ளேன்.

1924 ல் எனக்கு மணமாகி குடும்பத்துடன் சீரடியில் இருந்து நான்கு மைல் தூரத்தில் உள்ள கோசலே என்ற ஊரில் வசித்து வருகின்றேன்.

இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பாபா எனக்கு காட்சியளித்து வருகின்றார். பாபா வாழ்ந்தபோது அவரை சுற்றி கூட்டம் அதிகம் இருந்ததால் அவரருகில் இருக்க இடம் கிடைக்காது. அவரைச் சுற்ற ஏராளமான நாய் சூழ்ந்திருக்கும்.

பாபாவிடம் சில சகிப்புத்தன்மையே இல்லாத சில மதவாதிகள் வ்தை நானே கண்டிருக்கின்றேன். கேட்டும்

இருக்கின்றேன். காலம் சென்ற ஆர்.ஏ.தார்கட் அவர் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒன்றை என்னிடம் கூறியுள்ளார்.

ஓர்நாள் இரவு அவர் பாபாவிற்க ருகில் சாவடியில் தூங்கிக் கொண்டிருந்தார். கந்தஹாரைச் சேர்ந்த மீர் ஜமான் என்பவர் சமீப காலத்தில் பாபாவிடம் வருபவர். ஒரு நாள் இரவு சுமார் மூன்று மணிக்கு எழுந்திருந்து, பாபாவிடம், இந்துக்கள் உங்களை கெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே நான் ஒரு கத்தியை எடுத்து அவர்கள் அனைவரையும் கழுத்தை அறுத்து கொன்று விட்டு உங்களுக்கு விடுதலை அளிக்கப் போகின்றேன் என்று கூறினார்.

தார்கட் இதைக் கேட்டுக் கொண்டிருந்தார். அந்த முரடன் உண்மையிலேயே இந்துக்கள் அனைவரையும் படுகொலை செய்து விடுவானோ என அஞ்சினார். இருப்பினும் சாயிபாபா, மீர் ஜமானிடம், தான் ஒரு பித்தன் என்றும், அவரை வழிபடும் இந்துக்களும் பித்தர்கள் என்றும், இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு எதிராக தம்மை வழிபடுவதற்கு தாமே பொறுப்பு இந்துக்கள் அல்ல என்றும், நீ கழுத்தை வெட்ட வேண்டுமானால் என் கழுத்தைதான் வெட்ட வேண்டும் என்று கூறி சமாதானம் செய்தார். அதன் பின்னரே மீர் ஜமான் சமாதான மானார்.

நாகபுரியை சேர்ந்த அப்துல்லாகான் என்ற சகிப்புத்தன்மையற்ற மற்றொரு மதவாதி சிலகாலம் பாபாவுடன் தங்கியிருந்தார். அவர் ஒரு பத்திரிக்கையாளர். மகாத்மா காந்தி, ஸ்ரீ பூட்டி போன்றோரோடு அறிமுகம் உண்டு. சீரடியில் தங்கியிருந்த போது அடிக்கடி பாபா தம்மை ஏமாற்றி விட்டதாக குறை கூறிக்கொண்டே இருப்பார்.

அவர் ஒரு முறை நானா சோப்தாரை அடித்து விட்டார். அவர் மீது புகார் கூறப்பட்டு கோபர்காம் நீதிபதி முன் ஆஜர் படுத்தப்பட்டார். அவர்மீது குற்றம் நிரூபிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத் தொகையான ரூ.15 ஐ செலுத்த அவரிடம் பணமில்லை. ஆகவே சில நாட்கள் சிறைவாசம் அனுபவிக்க வேண்டியிருந்தது.

பின்னர் ஸ்ரீ பூட்டி ரூ.15 ஐ அனுப்பினார் என்னை ஏமாற்றிய பாபாவே பணம் கொடுக்கவேண்டும் அல்லாது மற்றவர்கள் பணம் கொட்த்தால் நான் ஏற்கமாட்டேன் என்று கூறி பணத்தை வாங்க மறுத்துவிட்டார். அதன்பின்னர் பாபா தம்மிடம் இருந்து பணம் கொடுத்தனுப்பி அவரை விடுதலை பெறச் செய்தார்.

இஸ்லாமிய கோட்பாடுகளை மீறி இங்கு நடப்பதால் உனது கழுத்து வெட்டப்பட வேண்டும் என்று பாபாவிடம் அவர் கூற பாபா சிரித்தார். அதன்பிறகு சிறிது நாட்கள் கழித்து அதற்காக பாபாவிடம் மன்னிப்பு கேட்டார். அதற்கும் பாபா சிரிப்பை மட்டுமே உதிர்த்தார்.

பாபா உயிருடன் இருந்த காலத்தில் ஒருவர் பாபா இறந்து விட்டால் அத்துடன் அவர் ஆற்றிவரும் பணியும் அவர் செல்வாக்கும் மறைந்து விடும் என்று அஞ்சியபோது," என்னுடைய சமாதியில் இருந்து தடிகள் கொண்டு அடிப்பேன்", அதாவது, அவருடைய உடலின் அழிவு அவருடைய ஆதிக்கத்தையும், செயலாற்று வதையும் முடிவிற்கு கொண்டு வராது என பதில் கொடுத்ததை நான் கேட்டிருக்கின்றேன்.

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

மிகவும் கடுமையான கலியின் களியாட்டத்தில் பலவிதமான இயற்கை சீற்றங்களினால் அல்லல்படும் நம் அனைவருக்கும் கலியுகத்தின் முதல் தத்த அவதாரியும் ஸ்ரீ ஷீரடி சாயிபாபா உருவில் என்றென்றும் நம்மை காத்து அருள்புரியும் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் அருளிச்செய்த இந்த மாமந்திரத்தை அனுதினமும் ஜபம் செய்து முழுமையான பாதுகாப்பு வளையத்தில் நாம் திகழ்ந்திட...



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ர தத்தாத்ரேயா திகம்பரா"!

– என்ற நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மந்திரத்தை ஜபம் செய்ய வேண்டுகிறோம்.

இம்மந்திரத்தை தினமும் 108 முறை ஜபம் செய்ய வாய்வு மண்டலத்தில் உள்ள எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து நம் அனைவருக்கும் பாதுகாப்பு கிட்டும் என்பது அனுபவப்பூர்வமான உண்மை.

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; **சுந்தர்சாய், 9789404451**

தெய்வீக அன்னை மாயம்மா



பொதுவாக சாதுக்கள் மற்றும் சன்யாசிகளில் ஆண் மற்றும் பெண் என இரு பிரிவினரும் உண்டு. தெய்வீக அவதாரங்கள் மற்றும் ஆன்மீக குருமார்களிலும் இந்த இரு பிரிவினரும் உண்டு.

நாம் வாழ்ந்து வரும் காலத் தில் வாழ்ந்தவர்களில் சீரடி சாயிபாபா, ரமண மகரிஷி, சேஷாத் திரி மஹான், ராமகிருஷ்ண பரமஹம் சர், அரபிந்தோ, ஆனந்தமாயி மா, அரவிந்தர், அன்னை, காரைக்கால் அம்மையார், ராமலிங்க அடிகளார், உபாசினி மஹராஜ், ஸ்வாமி சமர்த் தர், அன்னை சாரதா தேவி, சிவம்மா தாயீ மற்றும் மாயம்மா போன்றவர்கள் மிக எளிய வாழ்க்கை வாழ்ந்து லௌகீக மற்றும் உலக இன்பங்களை துறந்த நிலையில் வாழ்ந்தவர்கள்.

தம்மை நாடி வந்த பக்தர்களுக்கு அருள் செய்து, நன்மை செய்தவர்கள். அவர்கள். பல்வேறு நிலைகளில் வெளித் தெரியாமல் உண்மையான மாயங்களையும் அற்புதங்களையும் நிகழ்த்தி தமது பக்தர்களுக்கு மட்டும் இல்லாமல் தம்மை தேடி வந்த பிற மக்களின் உண்மையான, நியாயமான பிரார்த்தனைகளையும் நிறைவேற்றித் தந்தவர்கள்.

சித்தர்கள் பலரும் தாம் யார் என்பதை எப்போதுமே அடையாளம் காட்டிக் கொள்ள விரும்புவதில்லை. அதனால்தான் அவர்களது பிறப்பு குறித்த வரலாறு மறைந்துள்ளது. அந்த வகையில் சித்த புருஷரான ஷீர்டி சாயிபாபாவின் பூர்வீகம் இதுவரை வெளித் தெரியாமல் மர்மமாகவே இருந்து வருகின்றது.

அதே போலத்தான் பெண் சித்தராக உலா வந்துள்ள தெய்வீக அவதாரமான, பராசக்தி மற்றும் கன்யாகுமரி அம்மன் எனக் கருதப்படும் மாயம்மாவும் ஒருவர்

ஆவார்.

மாயம்மா யார் என்பது குறித்து அதிக தகவல்கள் கிடைக்கவில்லை. ஆனால் அவர் அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள காமாக்யா எனும் ஆலயத்தில் இருந்து தேவி காமாக்கியா எனும் பராசக்தியாக வெளிவந்தார் என்பதாக பரவலான நம்பிக்கை உள்ளது.

ஆனால் அவர் மக்களிடையே பிரபலமடைந்து வெளித் தெரிய ஆரம்பித்தது கன்யாகுமரி மாவட் டத்தில்தான். மாயம்மா எப்பொழுது அஸ்ஸாமில் இருந்து கன்னியாகுமரிக்கு வந்து சேர்ந்தார் என்ற விவரமோ, இல்லை அவர் எப்படி இங்கு வந்தார் என்பதோ எவ ருக்கும் தெரியவில்லை. அவருடைய பெற்றோர்கள் குறித்த தகவலும் எவருக்கும் கிடைக்கவில்லை.

முதலில் அவர் சித்தர் என்பதோ அல்லது தெய்வீக அன்னை என்பதாகவோ யாருக்கும் தெரியா மல்தான் இருந்துள்ளது. பிச்சைக்காரி போல அழுக்கான, கிழிந்து இருந்த ஆடைகளுடன், அருவருப்பான வெளித் தோற்றத்தில் கன்யாகுமரி மாவட்டத்தில் பெரும்பாலும் கடற்கரையில் அவர் உலவுவதை கவனித்து இருக்கின்றார்கள்.

அவருடன் எப்போதுமே பல நாய்கள் சுற்றிக் கொண்டே இருக்கும். கடற்கரையில் காலை, மாலை, இரவு என எந்நேரமும் படுத்துக் கிடப்பார், தாகம் பசி என எதுவுமே கிடையாது யாராவது உணவு கொடுத்தால் உண்பார் இல்லை எனில் நாள் கணக்கில் பட்டினியாகவே இருப்பார்

அதனால் அவர் சோர்வு அடைந்ததும் இல்லை.

பல நேரங்களில் அவர் கடற்கரை யின் ஓரத்தில் உள்ள கடல் பாறைகள் மீது அமர்ந்த கொண்டு இருப்பதையும், கடலுக்குள் மூழ்கி கடல் பாசிகளையும், குப்பைகளையும் வெளியில் எடுத்து வந்து அவற்றை கடற்கரையில் கொட்டி தீ மூட்டி விடுவதையும் மக்கள் பார்த்து உள்ளார்கள். எப்படி அவரால் வெறும் கையினால் தீ மூட்ட முடிந்தது என்பதோ எதற்காக தீ மூட்டினார் என்பதோ யாருக்கும் புரியாமல் இருந்துள்ளது.

மாயம்மாவின் தெய்வீக சக்தி வெளித் தெரிந்த கதை தனியானது. கன்யாகுமரி கடற்கரையில் சுற்றிக் கொண்டு இருந்தவரை, அருவருப்பான கோலத்தில், கிழிந்த மற்றும் அழுக்கான துணிமணிகளை அணிந்து கொண்டு சுற்றித் திரிந்த அவரை முதலில் ஒரு பைத்தியக்கார பிச்சைக்காரி என்றே





அனைவரும் நினைத்து வந்தார்கள்.

அவர் ஒரு மாபெரும் சித்த புருஷினி என்பதை அப்போது எவரும் அறிந்திருக்கவில்லை. ஆனால் அவர் கன்னியாகுமரிக்கு 1920 ஆம் ஆண்டுவாக்கில் வந்திருக்க வேண்டும் என்று நம்பப்படும் அந்த கால கட்டத்தில்தான் அவரை அங்கு வசிக்கும் மீனவர்கள் பார்த்து இருக்கின்றார்கள், 1925 ஆம் ஆண்டு வாக்கில்தான் அவரது புகழ் கன்யாகுமரியில் பரவலாயிற்று.

ஒரு நாள் வெளியூரில் இருந்து வந்த சுற்றுலாப் பயணிகள் ஊர்தி ஒன்று தெருவில் சென்று கொண்டிருந்த ஒரு நாய் மீது ஏற்றிவிட்டு சென்று விட்டது. நாயின் வயிறு கிழிந்து குடல் வெளியே வந்து சரிந்து விழுந்திருக்க, அதன் துர்நாற்றத்தைத் தாங்க முடியாமல், அந்த நாயை கண்ட மக்கள் முகம் சுளித்தார்கள். அதற்கு உதவி செய்ய ஒருவரும் அதன் அருகில் செல்லவே இல்லை.

அப்போது அந்த பக்கமாக நடந்து சென்று கொண்டு இருந்த மாயம்மா எந்த விதமான சலனத்தையும் வெளிக் காட்டாமல் மெல்ல நடந்து சென்று இறந்து விட்டதை போல கிடந்த அந்த நாயை எடுத்து தனது மடியிலே வைத்துக் கொண்டு அதன் குடலை அதன் வயிற்றுக்குள் தள்ளிவிட்டு சாலையில் கிடந்த மெல்லிய குச்சிகளை எடுத்து கிழிந்த பகுதியை சேர்த்து தையல் போடுவது போல அதன் உடலில் செருகி வைத்தாள்.

பிறகு கையில் சிறு பிடி மணலை எடுத்து அதை தடவிக் கொடுக்கலானாள். அதைக் கண்ட மக்கள் அருவருப்பான நிலையில், குடல் வெளியே வந்து விழுந்திருந்த

இறந்த நாயை மடியிலே வைத்துக் கொண்டு தடவிக் கொடுத்துக் கொண்டு இருக்கிறாளே பைத்தியக்காரி என அருவருப்பாக பார்த்துக் கொண்டே சென்றார்கள். எதையும் சட்டை செய்யா மல் மாயம்மா அதே சாலையின் ஓரத் தில் அந்த நாயை வைத்து விட்டுச் சென்றாள். இறந்து போக இருந்த நாயும் அங்கேயே கிடந்தது.

என்ன ஆச்சர்யம்! மறு நாள் காலையில் இறந்து கிடந்த அந்த நாய் கண்களை திறந்து பார்த்தது, காதுகளை அசைத்தது. அதன் பின் அது எழுந்து ஓடலாயிற்று. அதைக் கண்ட மக்கள் அதிர்ந்து நின்றார்கள். குடல் வெளியில் வந்து சிதைந்து கிடந்த உடலில் காயம் பட்ட வடு கூட காணவில்லையே! இதென்ன மாயம் ?

குடல் சரிந்து இறந்து கிடந்த அதே நாய் உயிர் பெற்று ஓடுகின்றதே என்பதைக் கண்ட மக்கள் அவள் எதோ தெய்வ சக்தி கொண்ட பெண்மணி என்பதை புரிந்து கொண்டு அவளை கனிவோடு பார்த்தார்கள். மெல்ல மெல்ல அவள் யார் என்பதை அறிந்து கொள்ள முயற்சி செய்தார்கள்,

கன்யாகுமரி கடற்கரையிலே உலவி வந்திருந்த மாயம்மா கடல் மீது நடந்து செல்வதைக் கண்டார்கள். தரை மீது நடப்பது போல கடல் மீதும் நடந்து சென்று விட்டு கடல் நடுவே சற்று நேரம் இருந்துவிட்டு திரும்புவதைக் கண்ட மக்கள் நிச்சயம் அவள் தெய்வீக பெண்மணியே என்பதை உணரலானார்கள்.

அது முதல் மக்கள் மாயம்மாவை மரியாதையோடு நடத்தி நல்ல உணவும், தங்கி கொள்ள ஒரு இடமும் தந்தார்கள். என்றாலும் அவர் எங்கும் நிரந்தரமாக தங்கவில்லை. கன்யாகுமரி கடற்கரை அருகில் உள்ள கடைவீதியில் இருந்த ஒரு பிள்ளையார் கோவிலில்தான் அவர் இரவில் தங்கி இருப்பாராம்.

தனக்கு கிடைக்கும் உணவில் சிறிது கையில் எடுத்துக் கொண்டு நாய்களுக்கு ஊட்டி விட்ட பின், அதே கையுடன் சுற்றி உள்ளவர்களுக்கும் வாயில் ஊட்டி விடுவாராம். அதை அறுவறுப்பாக பார்த்த சிலர் விலகிச் சென்றார்கள் என்றாலும், அதை பெற்றுக் கொள்வதை பாக்கியமாகவே பல மக்கள் கருதினார்கள். ஆனால் தினமும் அதை மாயம்மா செய்தது இல்லை. அவருக்கு என்று தோன் றுமோ அன்றைய தினத்தில் மட்டுமே அதை செய்வார்

கடலுக்குள் சுமார் 35 அல்லது 40 கிலோ மீட்டர்வரை உள்ளே சென்று மீன் பிடிக்க வந்திருக்கும் படகுகளின் நடுவே நீச்சல் அடித்துக் கொண்டு இருப்பாராம். அந்த நிலையில் கொந்தளிக்கும் கடலில் நீந்திக் கொண்டு இருக்கும் அவளை பார்த்து பரிதவிக்கும் மீனவர்கள் தங்கள் படகில் ஏறிக்கொண்டு கரைக்கு வருமாறு அழைத்தாலும் மாயம்மா அதில் ஏறிக் கொள்ள மாட்டாராம்.

மீன் பிடித்த பின் படகுகள் கரைக்கு திரும்பும்போது அவர்களுடன் நீந்தியபடியே கரைக்கு திரும்பும் மாயம்மா திடீர் என நீருக்குள் சென்று மறைந்து விடுவாராம். அவளைக் காணாமல் மூழ்கி விட்டாரோ என பயந்தபடி, பரிதவித்துக் கொண்டு கரைக்கு திரும்பினால் மாயம்மா

அங்கு கரையில் சிரித்தபடி அமர்ந்து இருப்பாராம்.

மெல்ல மெல்ல உள்ளூர் ஜனங்கள் அவளை பக்தியுடன் வணங்கினார்கள். ஆனால் அவளோ அவர்களுடன் ஒரு தோழமையோடுதான் பழகி இருந்தி ருக்கின்றார். பலரது தீராத வியாதிகளும் துயரங்களும் மாயம்மாவினால் விலகி உள்ளன. இத்தனைக்கும் மாயம்மா பேசியது இல்லை. ஒலி ஓசை போன்றவற்றை வாயினால் எழுப்பி அதன் மூலமே மாயம்மா தமது மாயங்களை வெளிக்காட்டி உள்ளார்.

மெல்ல மெல்ல மாயம்மா தெய்வமே என்பதை உணர்த்திய பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. தமக்கு துன்பங்களும் துயரங்களும் ஏற்பட்டபோதெல்லாம் அவளிடம் சென்று அதைக் கூற அவர்களை வெறும் கையாலேயே ஆசீர்வதிப்பார் மாயம்மா. பலரது நியாயமான துன்பங்களும் துயரங்களும் தீரலாயின.

1970 ஆம் ஆண்டு வாக்கில் மாயம்மா கன்யாகுமரியில் இருந்த போது, தன்னையே அறியாமல், மாயம்மா ஒரு தெய்வப் பிறவியாகவே இருக்க வேண்டும் என்ற எதோ ஒரு ஈர்ப்பு ஏற்பட்டதினால் அவரை தொடர்ந்து கண்காணித்தபடி ராஜேந்திரன் எனும் அன்பர் ஒருவர் இருந்துள்ளார்.


மாயம்மாவை பின் தொடர்ந்து சென்று அவருக்கு பணிவிடைகளை செய்தபடி இருந்தவர் சில காலத்தி லேயே அவருடைய தீவிரமான சிஷ்யர் ஆகி விட்டார். அவரே மாயம்மாவை சேலத்துக்கு அழைத்து வந்தவர். மாயம்மா இறுதிவரை பணிவிடை செய்து வந்தவர், மாயம்மாவின் ஆஸ்ரமத்தை அங்கு எழுப்பி அங் கேயே தங்கி உள்ளவர் திரு. ராஜேந்திரன்.

திருக்கோவிலூர் ஞானானந்த கிரி ஸ்வாமிகள், பூண்டி மஹான், யோகிராம் சூரத் குமார் ஸ்வாமிகள் போன்றவர்கள் தமது பக்தர்கள் சிலரை மாயம்மாவின் ஆசி பெற்றுக் கொண்டு வருமாறு அனுப்புவதை வழக்கமாக கொண்டிருந்தார்களாம்.

அவர்களே மாயம்மாவைக் குறித்து பலருக்கும் தெரியப்படுத்தி வந்துள்ளார்கள். மாயம்மாவின் வயதைக் குறிப்பிடுகையில் பூண்டி ஸ்வாமிகள் அவருடைய வயது 470 முதல் 485 ஆண்டுகள் எனக் கூறினாலும், பல ஆன்மீக குருமார்கள் பொதுவாக நம்பியது அவர் 300 ஆண்டுகளைக் கடந்தவர் என்பதே.

மாயம்மா கன்னியாகுமரியின் நடமாடும் தெய்வமாகவே இருந்தி ருக்கிறாள். ஒரு நாள் அந்த ஊரில் இருந்த மாயம்மாவைக் காணவில்லை. அந்த அம்மையார் திரு ராஜேந்திரனுடன் சேலத்துக்கு சென்று அங்கேயே தங்கி விட்டதான தகவல் மட்டும் கிடைத்தது. ஆனாலும் சேலத்தில் தங்கி இருந்த மாயம்மா கன்னியாகுமரியின் பல பாகங்களில் அவ்வப்போது தென்பட்டு வந்துள்ளார். பக்தர்களுக்கு தரிசனமும் தந்து உள்ளார். அற்புதங்களை நிகழ்த்தி உள்ளார்.

ஒருமுறை ஞானானந்த கிரி ஸ்வாமிகளின் பெண் பக்தை ஒருவர் தனக்கு பராசக்தியின் தரிசனம் கிடைக்க வேண்டும் என்ற தமது



ஆசையை தெரிவித்து அதற்கு என்ன செய்யலாம் எனக் கேட்டாராம். உடனே ஞானானந்த கிரி ஸ்வாமிகள் அவரை கன்யாகுமரி சென்று அங்குள்ள ஆலயங்களை தரிசிக்குமாறும் அங்கு அவளுக்கு பிராப்தம் இருந்தால் பராசக்தியின் நேரடி தரிசனம் கிடைக்கும் என்று கூறி அனுப்பினாராம்.

அந்த பெண்மணியும் கன்னியாகுமரிக்கு சென்று சில நாட்கள் தங்கி இருந்து பல ஆலயங்களுக்கும் சென்று உள்ளார். ஆனாலும் அவருக்கு பராசக்தி தரிசனம் கிடைத்த மனதிருப்தி ஏற்படவில்லை என்பதினால் மீண்டும் ஞானானந்த கிரி ஸ்வாமிகள் அவர்களை சந்தித்து, 'ஸ்வாமி நானும் நீங்கள் கூறி இருந்தபடி பல ஆலயங்களுக்கும் சென்றேன், ஆனால் எனக்கு பராசக்தியின் தரிசனம் கிடக்கவில்லையே எனக் கூறி வருத்தப்பட்டாளாம். அதைக் கேட்ட ஸ்வாமிகளோ 'அம்மணி நீ நேராக பராசக்தியின் தரிசனத்தைப் பெற்றாய். உனக்கு அந்த பராசக்தியே உணவை வாயில் ஊட்டி விட வந்தார். ஆனால் நீதான் பெற்றுக் கொள்ளாமல் இருந்து விட்டாய். உனக்கு பராசக்தியின் தரிசனம் கிடைத்தும் அதை உணர முடியாமல் போனது உனக்கு பராசக்தியின் அருள் பெறும் பிராப்தம் இல்லை என்பதே காரணம்' என்று கூறினாராம்.

அதைக் கேட்ட பெண்மணி திகைத்துப் நின்ற பின் சற்று நேரம் நிதானமாக யோஜனை செய்தபோது கன்யாகுமரியில் அவளுக்கு ஏற்பட்ட ஒரு அனுபவம் நினைவில் வந்ததாம். ஆலயங்களுக்கு சென்று விட்டு கன்யாகுமரி கடற்கரையில் நின்று கொண்டு இருந்தபோது அழுக்கான உடையில் இருந்த மாயம்மா தன் கையில் இருந்த உணவை எடுத்து அங்கிருந்த நாய்களுக்கும் நின்றிருந்த மற்றவர்களுக்கும் வாயில் சிறிது ஊட்டி விட்டாராம்.

இந்த பெண்மணிக்கு வாயில் ஊட்ட வந்தபோது அருவருப்பாக உள்ள யாரோ ஒருவள் எல்லோருக்கும் வாயில் ஊட்டி விட்ட உணவை நமக்கும் தருகிறாளே என முகத்தை திருப்பிக் கொண்டு அங்கிருந்து சென்று விட்டாராம். அந்த சம்பவம்

நினைவுக்கு வர ஸ்வாமிகளிடம் சென்று தனக்கு கிடைக்க இருந்த நன்மையை தானே கெடுத்துக் கொண்டு விட்டேனே என வேத னைப்பட்டாராம். ஸ்வாமிகள் அந்த அம்மையாரிடம் மாயம்மா பராசக்தியின் வடிவமான கன்யாகுமரி அம்மனே என்று கூறினாராம்.

பொன் காமராஜர் என்பவருக்கு ஒருமுறை பெரிய கட்டி ஒன்று தொடையில் வந்து அவரை வாட்டி யது. மருத்துவர்கள் கைவிட்டு விட் டார்கள். அவருடைய ஆயுளும் ஏழு நாட்கள்தான் இருக்கும் என்ற உணர் வையும் தந்திருந்தார்கள்.

ஆனால் யாரோ சொல்லி அவர் மாயம்மாவிடம் செல்ல மாயம்மா அவர் தொடையில் பழுக்கக் காய்ச்சிய கம்பியை ஒரு முனையில் குத்தி மறுபுறத்தில் அதை எடுத்து விட அலறியபடியே மயக்கம் அடைந்து விட்டாராம். நோயும் அதிசயமாக குணமாகி விட்டதாம்.

அதன் பின் அவரை அவர் செய்து வந்த வழக்கறிஞர் தொழிலை துறந்து விட்டு, மன அமைதியும், நிம்மதியையும் பெற ஆன்மீக போதனா வழிமுறைகளை கற்றறியுமாறு கூறி ஆன்மீக குருவான யோகிராம் குமார் சூரத் அவர்களிடம் மாயம்மா அனுப்பி விட, பொன். காமராஜர் அவர்களும் ஆன்மீக போதனைகளை பெற்று தபஸ்வியாக மாறிவிட்டார்.

அவர் இன்று கன்யாகுமரி மாவட்டத்தில் காணி மடம் எனும் இடத்தில் உள்ள யோகிராம் குமார் சூரத் ஆலயத்தை நிர்வாகித்து வருகிறார்திரு பொன் காம ராஜ் அவர்களுக்கு மாயம்மா தேவி பராசக்தி உருவத்தில் விஸ்வரூப தரிசனம் தந்துள்ளாராம்.

மாயம்மா ஜீவ சமாதி அடைய வேண்டும் என்ற எண்ணத்தை 1986 ஆம் ஆண்டிலேயே தனது சீடர் ராஜேந்திரனிடம் எடுத்துக் கூறி, எங்கு ஜீவ சமாதி அடைய வேண்டும் என்ற இடத்தையும் கூறினார். ஆகவே அந்த இடம் இருந்த சேலத்திற்கு ராஜேந்திரன் மாயம்மாவை அழைத்து வந்தார். மாயம்மா கூறி இருந்த இடமோ பொட்டைக் காடாக இருந்தது. ஆனாலும் மாயம்மா கூறிய குறிப்பிட்ட இடத்தின் மரத்தடியில் ஒரு குடிசைப் போட்டு தங்கி இருந்தார்கள்.

அப்போதெல்லாம் மாயம்மாவைப் பார்க்க பக்தர்கள் சிறிய அளவில் வந்து கொண்டு இருந்தார்களாம். பலருக்கும் மாயம்மா சேலத்திற்கு வந்தது பிடிக்கவில்லை. ஏன் எனில்



வருடா வருடம் தவறாமல் பெய்யும் மழை ஒரு சொட்டு கூட மாயம்மா வந்த ஆண்டில் பெய்யவில்லை. தெய்வம் என்பவள் இங்கு வந்த பின் மழை கூட பெய்யாமல் பூமி வறண்டு விட்டது.

ஆகவே அவளை மறுநாள் இங்கிருந்து துரத்த வேண்டும் என ஊர் மக்கள் பேசிக்கொண்டதை திரு ராஜேந்திரன் கேட்டுவிட்டு மாயம்மாவிடம் அதைக் கூறி வருந் தினாராம். அதைக் கேட்ட மாயம்மா ஒன்றுமே கூறவில்லை. அன்று இரவு எங்கிருந்தோ வந்த மழை மேகங்கள் அதிக அளவில் மழையை கொட்டி ஏரிகள், குளங்கள் என அனைத்தும் நிரப்பியது.

அடுத்த ஆண்டுவரைத் தேவை யான தண்ணீர் நிரம்ப மாயம்மாவைக் குறை கூறியவர்கள் மனம் வருந்தி அவளிடம் சென்று மன்னிப்பு கோரினார்கள். மெல்ல மெல்ல சேலத்தை சேர்ந்த இன்னும் சிலரும் மாயம்மாவிற்கு பணிவிடை செய்ய அங்கு வந்து போய் கொண்டு இருந் தார்கள்.

மாயம்மா சேலத்தில் வந்தவுடன் அவருக்கு அங்கு வந்து சேவை செய்து கொண்டிருந்த பெண்மணிகளின் ஒருவர் லதா மங்கேஷ்கர் என்பவர். அவர் திருச்சியில் ஆசிரியையாக இருந்தவர். அங்கிருந்து வந்து சேலத்தில் தங்கி மாயம்மாவிற்கு பணி புரிந்து வந்தார்.

மாயம்மா ஜீவ சமாதி அடைந்ததும், அன்று இரவு முழுவதும் அவரது உடலுக்கு அருகிலேயே அமர்ந்து இருந்தவர். அவருடைய மெய் சிலிர்க்க வைக்கும் அனுபவங்களை கூறுகின்றார்.

'உட்கார்ந்த நிலையில் வைக் கப்பட்டு இருந்த உடலின் அருகில் இரவு முழுவதும் நான் அமர்ந்து இருந்தேன். திடீர் திடீர் என அம்மாவின் உடலில் இருந்து வியர்வை வழிந்தோடும். அதை இரவு முழுவதும் தூங்காமல் இருந்து துடைத்து விட்டேன். நிறைய துணிகள் ஈரமாகி, அம்மாவின் தலையனை கூட ஈரமாகிவிட்டது.

கைகளில் வழிந்த நீரை துடைக்கையில் அம்மா கையை தூக்குகின்றீர்களா என மனதில் நினைத்துக்கொண்டேன். நான் நினைத்த மறுவிநாடியே கை தானாக தூக்கியது. அம்மாவின் உடல் இறந்தவர்கள் போல விறைத்து போகவில்லை.உயிருள்ள உடலைப் போலவே அசைந்து கொண்டிருந்தது. ஆகவே அம்மா உயிரோடுதான் சமாதி அடைந்து இருக்க வேண்டும்.

சமாதியில் வைத்து மூடிய பின்னர் நான் அங்கிருந்து செல்லாமல் சற்று நேரம் அங்கேயே நின்றிருந்தேன்.

அப்போது அம்மா அவர்கள் ஒரு பெரும் ஒளி வெள்ளமாக காட்சி அளித்தார்கள்.

மாயம்மா அவர்கள் 09.02.1992 அன்று மகாசமாதி அடைந்தார்கள்.

மாயம்மா ஆலய முகவரி:
5/184, சாந்தி நகர்,
சட்டக்கல்லூரி பஸ் ஸ்டாப்,
சின்னகொல்லப்பட்டி
சேலம் 636008.
Ph: **9677671177.**

தொடர்–17

மெய்ஞானப்பாதை

ஜனக மகாராஜா ஒரு முறை கனவு கண்டார். எதிரி நாட்டு அரசனால் தோற்கடிக்கப்பட்ட அவர், நாட்டில் இருந்து துரத்தப்பட்டார். எங்கே செல்வது என்று தெரியாததால் பிச்சைக்காரனைப் போன்று அலைந்தார். கந்தல் ஆடை அணிந்து, பசியாலும் பட்டினியாலும் வாடித் தவித்தார். இருக்க இடம் இல்லாமல் காடு மலை எல்லாம் அலைந்தார்.

கனவு முடிய திடுக்கிட்டு விழித்தெழுந்தார். தன்னுடைய "நான் மகாராஜா" என்ற நிலையை அடைய அவருக்கு சிறிது நேரமாயிற்று. அவர் கனவைக் குறித்து தீவிர விசாரணையில் ஆழ்ந்தார். அரசனாகிய நான், சிறிது நேரத்திற்கு முன்பு படாதபாடு பட்டேன். அது பொய் என்று என்னால் எண்ணவே முடியவில்லை. கனவு என்னை பிச்சைக்காரனாக்கி விட்டதே!

இதில் உண்மையான நிலை எது? சத்தியம் என்பது எக்காலத்திலும் மாறாதல்லவா? அப்படி இருப்பின், அரசனான நான் பிச்சைக்காரனாக மாறினேனா? அல்லது பிச்சைக்காரனான நான் என்னை அரசன் என்று எண்ணிக் கொண்டு மயங்கி உள்ளேனா? இப்பொழுது எந்த நிலை கனவு, எந்த நிலை நனவு, அரசன் என்ற நிலை கலைந்தால் எனது நிலை என்ன?

இத்தகைய விசாரணையினால் அவருக்கு இரண்டு விதமான அபிமானங்களான, நான் அரசன், நான் பிச்சைக்காரன் என்பவை ஒழிந்தன. அவர் மனம் சமநிலையை அடைந்தது. அவர் அகங்காரமற்ற, நிலையை அனுபவித்தார்.

எனவே நாம் அனுபவிக்கும் இந்த நனவுலகம் கனவிற்கு சமமானது. என்ற உண்மையை நாம் உணர வேண்டும். கனவு காண்கின்ற நேரம் அது உண்மை போல் தோன்றுகின்றது. விழித்தபின்பு அது பொய் என உணர்வது போன்று, நான் உடலன்று, நான் ஆன்மா, என்ற உண்மையான "ஆத்ம ஞானத்தை" உணர்ந்தால் இவ்வுலகம் என்னும் மாயத்தோற்றம் மறைந்து உண்மையான சத்திய நிலையை நாம் உணர்வோம்.

இருட்டறையில் கயிறு தொங்குவதைப் பார்த்து பாம்பு என்று எண்ணிப் பயப்படுபவனைப் போன்று, மனிதன் தன்னை சீவன் என்று எண்ணிப் பயப்படுகின்றான். நான் சீவன் இல்லை. நான் பரமாத்மாவே என்று எவன் அறிகின்றானோ, அவனே அச்சமற்ற தன்மையை அடைகின்றான்.

எவன் ஒருவன் எங்கெங்கும் தனக்கு வேறான இன்னொரு பொருளை பார்க்கின்றானோ, அங்கு நிச்சயம் பயம் உண்டாகும். எங்கும் ஓரே பரம் பொருளை பார்க்கின்றவனுக்கு, மயக்கமும் இல்லை, துக்கமும் இல்லை.

பயத்திற்கு காரணம் அஞ்ஞானமே! நான் ஆன்மா என்ற ஞானம் பலவீனால் ஒரு போதும் அடைய முடியாது. பலம் என்பது சரீர பலம் மட்டும் அல்ல. மனோபலமே தைரியம்



ஆகும். ஆத்மாவை உணர்ந்து கொள்ள விருப்பமுள்ளவன் தீரனாக இருக்க வேண்டும்

உள்ளதை உள்ளபடி அறியாமல் இருப்பதே அஞ் ஞானம். கயிற்றை பாம்பு என்று அறிந்ததற்கு கயிற்றைப் பற்றிய அறிவு இல்லாததே காரணம்.

மரணம் என்பது அனைவரும் கண்டு பயப்படுவது பயத்தின் உச்சநிலை. மரணமற்ற பெருவாழ்வு, அமரத்தன்மை என்பது அழியக்கூடிய சரீரத்தை குறித்து சொல்லப்பட்டதல்ல.

கயிறை பாம்பு என்று நினைத்து பயப்படுவதும், பின்பு அது வெறும் கயிறு என்று அறிந்த மறுகணம் அச்சம் நீங்குவது போன்று, ஞானம் பெற்ற பின்பே அச்சமற்ற நிலை ஏற்படும்.

தவம் செய்து சாதனையில் உச்ச நிலையை அடைந்த யோகி ஒருவர் தனது குடிலுக்கு அருகில் உள்ள மயானத்தில் தியானம் செய்வது வழக்கம். அவருடன் அவருடைய சீடனும் ஒரு நாள் தவத்தில் அமர்ந்தான். சிறிது நேர தவத்திற்குப் பின் யோகி தன் குடிலுக்குச் சென்று விட்டார். சீடன் மயானத்தில் தனித்து இருக்க நேர்ந்தது.

திடீரென அவன் மனதில் அச்சம் ஏற்பட்டது. உடனே மயானத்தில் இருந்து வெளியேறி குடிலுக்குச் சென்று கதவைத் தட்டினான். என்ன விசயம் என்றார் யோகி, மயானத்தில் தனியாக இருக்க முடியவில்லை. பயமாயிருக்கின்றது என்றான் சீடன்.

அப்படியா பயம் ஏன் தோன்றியது. நீ சாஸ்திரம் படித்தவன் தானே? பயம் என்றால் என்ன? என்றார் யோகி. சீடன் மவுனமாக நின்றான்.

யோகி கூறினார், "நீ உன் சரீரத்தின் மீது வைக்கின்ற பற்றுதான் பயமாக உருவெடுக்கின்றது. எங்கும் நிறைந்த பூரணப் பொருளாகிய நீ எதைக் கண்டு பயப்பட வேண்டும்"? எல்லா பொருளிலும் நீ நிறைந்திருக்கின்றாய் எனும் போது எது, எதைப்பார்த்து பயப்படும்.

இருப்பது இரண்டு என்றால் ஒன்றைப் பார்த்து மற்றொன்று பயப்படும். இருப்பது ஒன்றே என்றால் பயம் எப்படி ஏற்படும்?

சீடன் மயானத்திற்கு திரும்பச் சென்று ஆத்ம விசாரம் செய்து தவத்தில் ஆழ்ந்தான்.

தனக்கு புறத்தே உள்ள பொருட்களின் மீது வைக்கும் பற்று அதை தனக்கே உரிமையாக்கிக் கொள்ள வேண்டும் என்ற வேட்கை, அது தனக்கு கிடைக்காமல் போய் விடுமோ என்ற மன அங்கலாய்ப்பு. அப்படியே கிட்டினாலும் தன்னிடம் தங்குமா என்ற சந்தேகத்தால் தோன்றும் மனப்



பதைபதைப்பு. கிடைக்காமல் போனால் அதனால் ஏற்படும் ஏமாற்றம் ஆகிய பலவிமான மனக்குழப்பங்களுக்கு அடிப்படை அஞ்ஞானமே!

தன்னுடைய உண்மையான சொரூபம் என்ன என்பதை மறந்து வெளியில் தேடி அலைபவர் மன நிம்மதியை எப்படி பெற முடியும். நிலையற்ற பொருட்களின் மூலம் நிலைத்த சத்தியத்தை ஒருபோதும் பெற முடியாது.

தன்னை வெளிப்படுத்திக் கொள்ள தீபம் ஒன்று வேறு தீபத்தை நாடாது. அதைப் போன்று அறிவு மயமான ஆன்மா தன்னை வெளிப்படுத்தி கொள்ள வேறு அறிவின் துணையை நாடாது. வேறு அறிவு தேவை என்று வாதிட்டால், அதை அறிய இன்னுமொரு அறிவு தேவைப்படும். இப்படியே சென்று கொண்டிருந்தால் முடிவு என்பது ஏற்படாது.

இங்கு ஆத்மா சுய பிரகாசம் என்ற வார்த்தையை விசாரம் செய்யுங்கள்.

அனைத்திற்கும் ஆதாரமான சோதி சொரூபமே நமது நித்திய நிலை என்பதை உணர முடியும். இதை ஆதி சங்கரின் ஒரு பாடலின் விளக்கத்தின் மூலம் அறிவோம்!

குரு தன் சீடனிடம் கேட்கின்றார். உனக்கு வெளிச்சமாக இருப்பது எது?

சீடன் கூறுகின்றான், பகலில் சூரியனும், இரவில் நிலவும், எண்ணற்ற தீப வரிசைகளும்!

சிறப்பாக கூறினாய், சூரியனோ, நிலவோ, விளக்கோ இல்லாத போது உனக்கு சோதியாவது என்ன என்று கூறு?

இவை எதுவும் இல்லாத போது என் கண்களே சோதியாகும்!

உனது கண்களை மூடிக்கொண்டால் பின் எது சோதியாகும்?

கண்களையும் மூடிக்கொண்டால் எனது புத்தியே சோதி என்றான் சீடன்.

உனது புத்தியை பார்ப்பதற்கு எது சோதி என்றார் குரு.

என் புத்தியை நானே பார்ப்பவன். அங்கு நானே சோதி,

சரி இப்போது கூறு, எல்லாவற் றையும் பார்ப்பதனால் நீதானே சிறந்த சோதி,

சீடனும் மனத்தெளிவு பெறு கின்றான். தன்னைத் தவிர்த்து மெய் பொருள் வேறு எதுவும் இல்லை என்பது மேற்கண்ட பாடல் மூலமாக அறிகின்றோம்.

ஆயினும், தானே சுயஞ்சோதியாய் பிரகாசிக்கும் ஆத்மாவை நாம் உண ராமல் இருப்பது எப்படி சாத்தியம்? உலகப் பொருட்களால் நாம் உள்ளதை உள்ளபடி உணராது இருக்கின்றோம்.

- (தொடரும்)

ஓம் சாய்ராம்

"வாழ்வை வளமாக்கும் சாயி லிகித ஜபம்"

சாய் அன்பர்களே,



முயற்சி திருவினையாக்கும் என்பது வள்ளுவம். வாருங்கள் நாமும் இந்த லிகித நாம ஜெபத்தை ஊக்கத்துடன் முயன்று செயல்பாட்டில் ஆக்கம் காண்போம். சத்குரு சாய் மஹராஜ் திருவருளால் நம் வாழ்வில் மன அமைதியோடு கூடிய வெற்றியைக் காண்போம்.

நமது லிகித நாம ஜபம்
"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்"

நம் எல்லோருடைய இல்லங்களிலும், உள்ளங்களிலும் ஒளி ஒலி வீசட்டும். இதுவரை (30.11.20) 300 நாட்களாக தினமும் 108 முறை எழுதிவரும் நம் சாய் அன்பர்களுடன் இணைந்து சாய் மஹராஜ் திருவருள் பரிபூரணமாக நம்மை வழிநடத்த ப்ரார்த்திப்போம்.

'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;
சுந்தர்சாய், செல்: 9789404451

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்:



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் தரிசிக்க இருப்பது, ஸ்ரீ சடையம்மாள் (எ) கமலாம்பாள் அவர்களின் சீவசமாதி தரிசனம்.

ஸ்ரீ சடையம்மாள் (எ) கமலாம்பாள்

நம்முடைய நாட்டில் சீவ சமாதி ஆகப்போவதை முன்கூட்டியே அறிவித்து சீவசமாதி ஆன சித்தர் பெருமக்கள் பல ஆயிரம் பேர் இருக்கின்றார்கள். அதில் ஆண் சித்தர்களே அதிகம். பெண் சித்தர்களை கான்பது மிகவும் அரிது.

அந்த வகையில் தான் காலம் முழுவதும் பிரம்மச்சரிய வாழ்க்கை வாழ்ந்து சீவ சமாதி ஆன பெண் சித்தர் அம்மையார் கமலாம்மாள் ஆவார்கள்.

தமிழ்நாட்டின் தஞ்சை மாநகரில் பிறந்தவர் நம் அன்னை. சிறுவய திலேயே அதிக ஆன்மீகப் பற்றுடன் வளர்ந்து வந்தார். அக்காலத்தில் பெண் பிள்ளைகளுக்கு சிறு வயதிலேயே திருமணம் செய்யும் பழக்கம் இருந்ததினால், நம் அன்னையார் எவ்வளவோ முரண்டு பிடித்தும் அவரது 11 வது வயதில் அவரது பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர்.

சிறிய வயது என்பதால் புகுந்த வீட்டில் அன்னையின் ஆன்மீக செயல்பாடுகளுக்கு யாரும் தடைபோடவில்லை. அன்னை



ஸ்ரீ வடிவுடையம்மனை தன் குருவாக நினைத்து தீவிர ஆன்மீகப் பயிற்சிகளை செய்து வந்தார். காலம் செல்லச் செல்ல படிப்பிலும், ஆன்மீகத்திலும் ஒரு சேர ஆர்வம் காட்டிவந்தார்.

இல்லறத்தில் ஈடுபடும் வயது வந்த போது தன்னுடைய கணவரிடத்தில் தன்னுடைய பிரம்மச்சரிய தவத்தை எடுத்துக்கூறி, தனக்கு இல்லற இன்பத்தில் ஈடுபட விருப்பம் இல்லை. தன் வாழ்நாள் முழுவதும் ஸ்ரீ வடிவுடையம்மனுக்கு சேவைசெய்து ஆன்மீக வாழ்வையே ஏற்க விரும்புகின்றேன். என்று கூற அன்னையின் தெய்வீகத்தன்மையை உணர்ந்து கொண்ட அவரது கணவர் அவரது விருப்பத்திற்கு வழிவிட்டு ஒதுங்கிக்கொண்டார்.

திருமணபந்தத்தில் இருந்து விலகிய அன்னை, மேலும் படித்து பெற்றோரின் துணையோடு, சென்னை கொண்டித்தோப்பில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து வந்தார். இவருடைய ஆன்மீக ஈடுபாட்டை உணர்ந்த பள்ளியின் மற்ற ஆசிரியர்கள் அன்னைக்கு உறுதுணையாக இருந்தனர்.

அன்னை கமலாம்மாள் ஆசிரியராக பணியாற்றி வரும் காலங்களில் அவர் வாழ்ந்து வந்த இடமான சென்னை திருவொற்றியூர் மாட்டுச் சந்தை பகுதியில் இருந்து மூல கொத்தளம் பகுதியில் உள்ள பள்ளிக்குச் செல்ல தினமும் அரசுப் பேரூந்து 56G, 56A, ல் சென்று வருவது வழக்கம்.

அன்னையின் ஆன்மீக வாழ்வை உணர்ந்து அவருக்கு மரியாதை அளிக்கும் விதமாக, பேரூந்து ஒட்டுனர்களும், நடத்துனர்களும், அன்னை அமருவதற்காக ஒரு இருக்கையை ஒதுக்கிவிடுவார்களாம். அந்த பகுதி மக்கள் அனைவருமே அன்னயின் தெய்வீக சக்தியை உணர்ந்து அவருக்கு மரியாதை செலுத்தியிருக்கும் விதம் இப்போது நினைத்தாலும் என் மனதில் இனம் புரியாத ஆனந்தத்தை தருகின்றது.

பிற்காலத்தில் ஆசிரியைப் பணியை துறந்து முழுநேர ஆன்மீகப் பணிக்கு தன்னை அர்பணித்தார் அன்னை.

ஸ்ரீ வடிவுடையம்மனுக்கு வாழ்நாள் முழுவதும் தன் கைகளாலேயே மாலை கட்டி அணிவித்து அழகு பார்த்தார். தன் வீட்டையே, ஆலயமாக மாற்றி,

ஸ்ரீ வடிவுடையம்மன், ஸ்ரீ கொடிவுடையம்மன், ஸ்ரீ திருவுடையம்மன் என மூன்று அழகிய அம்மன் சிலைகளை நிறுவி ஆலயம் எழுப்பி குடமுழுக்கு செய்வித்தார்.

ஆலய வளாகத்தில் உள்ள சிறிய ஓட்டு வீட்டில் தவம் செய்து வந்தார். ஸ்ரீ வடிவுடையம்மனின் அருளால் அன்னை ஞானம் பெற்று சித்தர் நிலையை அடைந்தார். தன்னை நாடிவ ரும் பக்தர்களின் கோரிக்கைகளை நிறை வேற்றி வைக்க, மக்கள் அவரை வணக்கினர். ஆயினும் அன்னை ஸ்ரீ வடிவுடை யம்மனையே வணங்கச் சொல்வார்கள்.

தன்னுடைய இறுதிக்காலத்தை உணர்ந்த அன்னை தான் சீவ சமாதி ஆகப்போவதை தன் தொண்டர்களிடம் தெரிவிக்க, அன்னையை பிரியமுடியாத மக்கள், நீங்கள் இன்னும் பலகாலம் எங்களுடன் இருக்க வேண்டும் என்று மன்றாடினர்.





இருப்பினும் தன் நெருங்கி அடியார்க லிடம் புரட்டாசி பௌர்ணமி அன்று தான் சீவசமாதி ஆகப்போவதாக அறிவித்து அதற்குண்டான ஏற்பாடுகளை செய்ய கூறினார்.

சீவசமாதிக்கு அன்றைய தமிழக முதல்வராக இருந்த டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் அன்னையைப் பற்றிய அனைத்து தகவல்களையும் தெரிந்து கொண்டு, கனத்த இதயத்தோடு அனுமதி அளித்தார்கள்.

அன்னை அறிவித்தபடி புரட்டாசி பௌர்ணமி நாளன்று தான் வாழ்ந்து வந்த இல்லத்திலேயே, தான் குறித்த நேரத்தில், தொண்டர்கள், ஊர்மக்கள், கலெக்டர், அரசு அதிகாரிகள் முன்னிலையில் கபால மோட்சம் அடைந்தார்கள்.

இக்கட்டுரையை எழுதும் நேரம் உங்களது வாழ்க்கையையும், மக்கள் உங்கள் மீது வைத்திருந்த அன்பையும் நினைக்கும் பொழுது சற்று உணர்ச்சி வயப்பட்டேன்.

அன்னையின் சமாதியை தரிசிக்க நான் இரண்டு முறை முயற்சித்தும் பலன் கிடைக்கவில்லை. சற்று மனம் வருந்தியது. ஏன் எனில் அன்னையின் சமாதி, மாதத்தில் பௌர்ணமி தினம் மட்டுமே திறக்கப்படும்.



ஆகையால் அடுத்தமாதம் பௌர்ண மிக்குச் சென்றேன். அன்னையின் அருளும், ஆசியும் கிடைத்ததை உணர்ந்தேன். ஏன் எனில் அன்று அன்னையின் குருபூஜை. இரண்டு முறை தரிசனம் கிட்டாமல் மூன்றாம் முறை, அதுவும் அன்னையின் குருபூஜை அன்று தரிசனம் கிட்டியது. அன்னையின் அருள் என்று எண்ணி மனம் மகிழ்ந்தது.

அன்னையின் வரலாற்றினை எனக்கு தெரிவித்த அன்னையின் அண்ணன் மகள் (பெயர் குறிப்பிட விரும்பவில்லை) அவர்களுக்கும், சித்தர்களைப் பற்றி எழுத எனக்கு ஊக்கமளித்த சாய் மகராஜ் குருவை தேடி ஆசிரியர், மரியாதைக்குரிய திரு. ஸ்ரீராம் ஐயா அவர்களுக்கும், நான் வணங்கும் ஸ்ரீ சாய்பாபா குருவிற்கும் என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பு: சீவசமாதி மாதத்தில் பௌர்ணமி தினத்தன்று காலையில் மட்டும் திறந்திருக்கும்.

ஆலய முகவரி: அருள்மிகு, மூன்று அம்மன் திருக்கோவில், அன்னை ஸ்ரீ கமலாம்பாள் (எ) சடையம்மாள் சீவ சமாதி ஆலயம், 101, பேசின் ரோடு,

மாட்டுமந்தை பஸ் நிறுத்தம்,

திருவொற்றியூர் ரயில் நிலையம் அருகில், சென்னை19.

பேரூந்து வழித்தடம்:

கோயம்பேடு திருவொற்றியூர் பாரிமுனை எண்ணூர்

இறங்குமிடம்: ஸ்ரீ வடிவுடை யம்மன் பேரூந்து நிலையம்.

புகைவண்டி வழித்தடம்: சென்னை கடற்கரை கும்மிடிப் பூண்டி

சென்னை மெட்ரோ இரயில். இறங்குமிடம்: திருவொற்றியூர்

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK Lubricants | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
9843440806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG. REALLY LONG.









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

S.Jayanthy,

17/7 **A**, *பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,*
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்:

திருமதி. ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம். ரூ.2000.
திருமதி. இந்திரா வெங்கடாசலம். மந்தைவெளி.ரூ.1000.
திருமதி. சாந்தி.மந்தைவெளி.ரூ.1000.
திருமதி. ஹேமரம்யா.கோவை.ரூ.1000.
திருமதி. ஆர்.சுமதி. கொளத்தூர்.ரூ.1000
திருமதி. சரண்யா ஞானமூர்த்தி. அயனாவரம்.ரூ.1000.

திரு.சிவராமன்.பெரம்பூர்.ரூ.600.
திருமதி. உமா விஜய்ஆனந்த்.அயனாவரம். ரூ.600.
திருமதி விஜிலாபாசுமதி.பிரைடே மார்க்கெட்.ரூ.500.
திரு.ஆர்.ஜெயமணி.துறைமுகம்.ரூ.500
திருமதி.லட்சுமி. மந்தைவெளி .ரூ.500.
திருமதி.தெய்வநாயகி.திட்டை .ரூ.500.
திரு.ஹரிணி, ஹஸ்வந்.அயனாவரம். ரூ.500
திரு.சுகன்யா துரைராஜ். ரூ.500.



திரு.வெங்கடாசலம்.டி.நகர்.ரூ.500./ திரு.கேஸ்வர்.ஈரோடு.ரூ.500.
திரு.துரைச்சாமி.கோவை.ரூ.500. / திருமதி.லதா பாபு, வேப்பம்பட்டு.ரூ.500.
திருமதி. வாழ்க வளமுடன் சுமதி. பெரியார் நகர்.ரூ.500.
திருமதி. பிரதீபா தீதி.சேலம்.ரூ.400
திருமதி.பாக்கியவதி. ராணிப்பேட்டை.ரூ.400.
Mr.V.C.DHAVE,Bangalore.Rs.301.
திருமதி.ஜெயந்தி தியாகராஜன். மாவுத்தன்பட்டி.ரூ.300.
திருமதி.விஜயலட்சுமி.சென்னை. ரூ.200.

திரு.என்.தட்சிணாமூர்த்தி.துறைமுகம்.ரூ.200.
திருமதி.ஜானகிசீனிவாசன்.ரூ.200./ திரு.ஐஸ்வர்யா.டி.நகர்.ரூ.200
திரு.விஜயன்.சி.சி.பேங்க் மேனேஜர். பெரியார் நகர்.ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி. ஓய்வு.அசோக்லேலண்ட். கொளத்தூர்.ரூ.200.
திருமதி.யாமினிபிரியாவிஜயகுமார்.அயனாவரம்.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ்-டிராவல்ஸ். பெரியார் நகர்.ரூ.200.
திருமதி.பிச்சையம்மாள்.பெரம்பூர்.ரூ.100

திருமதி.பிரியா அயனாவரம்.ரூ.100.
திருமதி. ஷீலா.சின்னாளப்பட்டி.ரூ.100.
திருமதி.பஞ்சவர்ணம்.சின்னாளப்பட்டி.ரூ.100.
திருமதி.குமுதா.சின்னாளப்பட்டி.ரு.100
திருமதி.சாந்தி மோகன்.AYK ரூ.100.
திரு.சாய்னி.போரூர்.ரூ.100.
திரு.சிவா மளிகை.கொளத்தூர்.ரூ.50.
திருமதி.சாந்தி பாஸ்கர்.பெரியார்நகர் ரூ.50.
திரு.கங்கா ஸ்டோர்.பூம்புகார்நகர்.ரூ.50
திரு.அகஸ்டின் குடும்பத்தார்.
குன்றத்தூர் .அரிசி.1 மூ
திருமதி.மீனா, மேலக்கோட்டை. ரூ.300
திரு.பாலமுருகன்.AYK ரூ.150.
திருமதி.உமா, சின்னாளப்பட்டி - ரூ.100



என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 150 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 400 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 1,500 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் முலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

ஸ்ரீ பைரவ சாய் பீடம்,தொட்டியம், திருச்சி.ரூ.500.
திரு.முருகைய்யா.திண்டுக்கல்.ரூ.500
திரு.சிவராமன். வேலூர்.ரூ.500.
திரு. இராதாகிருஷ்ணன்.பாரதி நகர். ரூ.150.
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரம்பூர்.ரூ.200.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.400/ மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

ரூ.501/மதிப்புள்ள அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 501/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஓரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.